2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

மாவட்ட செயலகம் – ஹம்பாந்தோட்டை

செலவுத் தலைப்பு இலக்கம் - 263



தொலைபேசி இல :-0472256235

தொலைநகல் :- 0472256235

இணையதளம் :- www.hambantota.dist.gov.lk

மின்னஞ்சல் முகவரி :- moha.dst.hambantota@gmail.com

நன்றி ...!

இந்த அறிக்கையை தயாரிப்பதற்குத்
தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை

வழங்கி பங்களிப்புச் செய்த

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின்

அனைத்து பிரிவுத் தலைவர்கள் மற்றும் பிரதேச
செயலகங்களின் தலைவர்கள்

உள்ளிட்ட ஒத்துழைப்பு வழங்கிய
அனைவருக்கும்.

உள்ளடக்கம்

தொ. இல.

01 அத்தியாயம்

1.1 அறிமுகம் 1-6
1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கம் 7
1.3 பிரதான பணிகள் 8
1.4 நிறுவனக் கட்டமைப்பு 9-10
1.5 மாவட்ட செயலகத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் 12 பிரதேச செயலகங்கள்

1.5.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பிரிவுகள் 11-28
1.5.2 ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களின் பணியாட்டொகுதி பற்றிய விபரம் 29
1.5.3 பிரதேச செயலகங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் 30-31

02. அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்னோட்டம்

2.1 பிரதேச செயலகங்கள் மூலம் நிறைவேற்ப்படும் பிரதான பணிகள் 32
2.2 பிரதேச செயலகங்களின் வருடாந்த செயற்பாட்டுத் திட்ட முன்னேற்றம் 32
2.3 பிரதேச செயலகங்கள் அடைந்துள்ள வெற்றிகள் 33-44
2.4 பிரதேச செயலகங்கள் எதிர்நோக்கும் சவால்கள் 45-47
2.5 பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள் 48-53
2.6 மாவட்ட செயலகத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.6.1 வெற்றிகள் 54
2.6.2 பல்வேறு துறைகள் அடிப்படையில் பெற்ற வெற்றிகள் 55-56
2.6.3 சவால்கள் 57
2.6.4 இலக்குகள் 58

03. அத்தியாயம் – ஒட்டுமொத்த செயலாற்றுகை

3.1 நிதி முன்னேற்ற செயலாற்றுகை கூற்று
3.2 நிதி நிலைமைக் கூற்று
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு
3.5 வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை
3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாட்டு செயலாற்றுகை
3.7 நி.பி. 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்துக்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு
3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை
3.9 கணக்காய்வாளர் அறிக்கை

04. அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டி

05. அத்தியாயம் – பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

06. அத்தியாயம் – மனித வள விபரம்

06.1 பணியாட்டொகுதி முகாமைத்துவம்

06.2 நிறுவன செயலாற்றுகை மீது மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்

06.3 மனித வள அபிவிருத்தி

07. அத்தியாயம் – இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 1

1.1. அறிமுகம்

ஹம்பாந்தோட்டை மாவட்டம்

ஹம்பாந்தோட்டை என்ற பெயர் எப்படி உருவானது என்பது பற்றி இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. "ஹம்பன்" என்ற படகு வந்தடைந்த இறங்குதுறை ஹம்பாந்தோட்டை என்பதே மிகவும் பிரபலமான கருத்து ஆகும். பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களின் கூற்றுப்படி, மலாய் கப்பல்கள் இங்கு வந்ததால் இந்த துறைமுகத்திற்கு ஹம்பாந்தோட்டை என்று பெயர் வந்தது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேசம், இலங்கை வரலாற்றில் ஒரு சிறந்த கலாச்சாரம் மற்றும் நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க ரோஹன அரசாட்சியின் ஒரு பகுதியாகும். ஆரிய குடியேற்றத்திற்கு முன், இப்பிரதேசம் பற்றி வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தகவல்கள் அதிகளவு காணப்படாத போதும் ராகூ மற்றும் யகூ என அழைக்கப்படும் விருத்தியடைந்தது எனக் கருதப்படக் கூடிய இரண்டு வகை பழங்குடியினர் இங்கு வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன.

ஒரு சுதந்திர தேசம், நவீன நாகரிகம் மற்றும் தூய பௌத்த கலாச்சாரம் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதில் இப் பிரதேசம் பாரியளவு பங்காற்றியது. அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை இராச்சியங்கள் தென்னிந்திய படையெடுப்பாளர்களிடம் சரணடைந்தபோது, ஹெல பாரம்பரியத்தை பாதுகாக்க துணிச்சலான உறுகுணை மாவீரர்கள் முன்வந்தனர். துட்டகைமுணு, தாதுசேனன், விஜயபாகு போன்றவர்களுக்கு இலங்கையை ஒன்றிணைப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் உருஹுணை மக்கள் ஆகும். பௌத்த மதம் அழிவின் விளிம்பில் இருந்தபோது, உருஹுணு வெஹெர விகாரைகளில் அது பாதுகாக்கப்பட்டது. அனுராதபுர இராச்சியத்தின் போது மக்கள் பஞ்சத்தை எதிர்கொண்ட போது மற்றும் தேசிய சுதந்திரத்திற்காக இலங்கையர்கள் போராடிய போது அவர்களுக்கு உருகுணை வயல்களில் இருந்து அரிசி வழங்கப்பட்டது. அந்த மாபெரும் உருஹுணு நகரத்தின் ஒரு பகுதியாக ஹம்பாந்தோட்டை முக்கியத்துவம் பெறுகிறது.

காலனித்துவ காலத்தின் தொடக்கத்தில், போர்த்துக்கேயர்களின் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தின் போது கண்டி இராச்சியம் ஹம்பாந்தோட்டையிலிருந்து உப்பினைப் பெற்றதாக கூறப்படுகிறது. ஆங்கிலேயர் காலத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகமாகவும் நகர மையமாகவும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதன்படி, ஆங்கிலேயர்கள் ஹம்பாந்தோட்டை நகரில் கச்சேரி, பல்வேறு அரச திணைக்கள அலுவலகங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றை தாபித்து அதனை மாவட்டத்தின் பிரதான நிர்வாக நகரமாக மாற்றினர்.

ஆங்கிலேயர் காலத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டம் 72 கிராமத் தலைவர்களை உள்ளடக்கிய "மேற்கு கிருவாபத்துவ", 36 பிரிவுகளை உள்ளடக்கிய "கிழக்கு கிருவாபத்துவ" மற்றும் 28 பிரிவுகளை உள்ளடக்கிய "மாகம்பத்துவ" என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் நிலப் பிரதேசத்தின் அடிப்படையில் மாகம்பத்துவ பரப்பளவில் மிகப் பெரிய பிரதேசமாக இருந்தது.

இலங்கையின் தென்கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை மாவட்டம் 2609 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இது தீவின் மொத்த நிலப்பரப்பின் 4% ஆகும். மாவட்டத்தின் அதிகபட்ச நீளம் 106 கி.மீ. மற்றும் அதிகபட்ச அகலம் 39 கி.மீ.ஆகும். வடக்கே ஹிங்குரகந்த முதல் தெற்கே வெல்லத்தரகொடை வரை மாவட்டத்துக்கு உட்பட்டுள்ளதுடன் கடற்கரைப் பகுதியின் நீளம் 151 கி.மீ. ஆகும். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 114.6 கி.மீ. உள்ளக நீர்த்தேக்கங்களால் நிரம்பியுள்ளது. அகலாங்கு நெட்டாங்கு அமைவிடத்தின் பிரகாரம் வடக்கே 6.0 முதல் 6.5 வரையும் கிழக்கு நெட்டாங்கு 80.6 முதல் 81.7 வரை பரவியுள்ளது. றும் தீர்க்கரேகையின் இருப்பிடத்தின் படி, இது 6.0 முதல் 6.5 வடக்கு மற்றும் 80.6 முதல் 81.7 கிழக்கு தீர்க்கரேகை வரை நீண்டுள்ளது. இந்த மாவட்டம் வடக்கே மொனராகலை, அம்பாறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களையும், மேற்கே மாத்தறை மாவட்டத்தையும், தெற்கு மற்றும் கிழக்கே இந்தியப் பெருங்கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள இயற்கையின் கொடைகளான தங்காலை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஹும்மானய மற்றும் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வெந்நீர் ஊற்றுகள் மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள உஸ்ஸங்கொட பிரதேசம் ஆகியன இந்நாட்டில் காணப்படும் அரிதான புவியியல் ரீதியான அம்சங்கள் ஆகும். அம்பலாந்தோட்டைக்கு அப்பால் அமைந்துள்ள மதுனாகலை எனும் ஆராமைக்கு அண்மையில் இந்த

வெந்நீரூற்றுகள் அமைந்துள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் நீர்வடிகால் அமைப்பு 19 பிரதான ஆறுகள் மற்றும் இயற்கை நீர்மார்க்கங்களைக் கொண்டுள்ளது. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.

நதிகள்	**நீளம் (மைல்)**	**நதிகள்**	**நீளம் (மைல்)**
சீனிமோதர ஓயா	5	தம்பாவே ஆர	35
கிரம ஓயா	20	மஹசீலாவே ஓயா	8
ரெகவ ஓயா	4	பூதவ ஓயா	8
ஊருபொக்கு ஓயா	26	மாணிக்க கங்கை	71
கச்சிகல்ஆர ஓயா	13	கட்டுபொல ஆர	11
வளவை கங்கை	85	கரெந்த ஆர	16
கரகன் ஓயா	45	நமடகஸ் ஆர	4
மலல ஆர	34	கரம்பே ஆர	3
எம்பிலிகல் ஓயா	85	கும்புக்கன் ஓயா	72
கிரிந்தி ஓயா	73		

இவற்றுள் வளவ கங்கை, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை, ஊருபொக்கு ஓயா மற்றும் கச்சிகல்ஆர போன்றே மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள கும்புக்கன் ஓயா ஆகியன பிரதான நீர்மார்க்கங்கள் ஆகும். பெரும்போகம் எனப்படும் வடகீழ் பருப் பெயர்ச்சி காலத்தின் போது (நவம்பர் – மார்ச்) இந்த நதிகளின் நீர் மட்டம் உயர்வடைவதுடன் சிறுபோகம் எனப்படும் தென் மேல் பருவப் பெயர்ச்சி காலத்தின் போது (மே – செப்டம்பர்) நீர் மட்டம் குறைவடையும்.

மாவட்டத்தில் உள்ள பிரதான குளங்கள் மற்றும் உள்ளக 13 நீர்த்தேக்கங்களில் ரிதியகம மிகப்பெரிய குளமாக காணப்பட்ட போதும் முருத்தவெல மற்றும் லுனுகம்வெஹெர நீர்த்தேங்கங்களில் ஆகக் கூடுதலான நீர் கொள்ளளவு உள்ளடங்கும். கூடுதலான அளவு குளங்கள் திஸ்ஸமகாராம பிரதேசத்தை அண்டியதாக அமைந்துள்ளது.

மாவட்டத்தில் பிரதானமாக நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் சில கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. உடவளவ அபிவிருத்தி திட்டம், கிரம ஓயா திட்டம், ஊருபொக்கு ஓயா திட்டம், லியன்கஸ்தொட்ட திட்டம், ரிதியகம திட்டம், லுனுகம்வெஹெர திட்டம், மவ்ஆர திட்டம் மற்றும் கெக்கிரிஓபட திட்டம் ஆகியன இவற்றுள் உள்ளடங்கும். மாவட்டத்தில் உள்ள விவசாய குடியேற்றத் திட்டங்களாக மஹகல்வெவ, பந்தகிரிய, பெரகம மற்றும் முருத்தவெல திட்டம் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

மேற்கே குடாவெல்ல முதல் கிழக்கே பட்டனங்கல வரை நீண்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய கடற்கரை பல்வேறு பண்புகளை உள்ளடக்கி உள்ளது. அவற்றுள் கடற்கரையின் தரைநிலத்தில் அமைந்துள்ள களப்புகள், குடாக்கள் மற்றும் துறைமுகங்கள் ஆகியன முக்கிய இடம் வகிக்கின்றன. 27 துறைமுகங்கள் காணப்படுவதுடன் அவற்றுள் 7 உப்பளங்களும் 04 பிரதான மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளடங்கும். தேசிய உப்பு உற்பத்திக்கு பெருமளவு பங்களிப்புச் செய்யும் உப்பளங்களுள் ஹம்பாந்தோட்டை மஹலேவாய, கொஹொலங்கலை உப்பளம் மற்றும் பலட்டுபான ஆகியன பிரதான உப்பங்களாக காணப்படுகின்றன. பிரதான மீன்பிடித் துறைமுகங்களான குடாவெல்ல, தங்காலை, ஹம்பாந்தோட்டை மற்றும் கிரிந்த ஆகிய துறைமுகங்கள் நவீன வசதிகள் கொண்ட மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மணல் மேடுகளுடன் கூடிய கடல் மற்றும் முகத்துவாரங்கள் போன்ற பண்புகளும் முக்கியம் பெறுகின்றன.

வரல் மற்றும் அரைவெப்ப காலநிலைப் பண்புகள் அதிகமாக காணப்படும் இந்த மாவட்டத்தின் சூழல் மற்றும் காலநிலை மாற்றங்களை நன்கு உணர்த்தும் ஈரவலய பண்புகளும் ஓரளவு காணப்படுகின்றன. மாவட்டத்தின் மேற்கு எல்லையில் மலையடிவாரங்களின் ஊடாக பாயும் சிறிய நீர்வீழ்ச்சிகள் சிலவும் காணப்படுகின்றன. 40 அடிகள் உயரம் கொண்ட பிசோகல எனப்படும் சப்புகல தொல நீர்வீழ்ச்சி இவற்றுள்

முக்கியமானது ஆகும். பிரதேசத்தின் சாதாரண வெப்பநிலை 31 செல்சியஸ்களாக காணப்படுவதுடன் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1,049 மி.மீ ஆகும்.

நிர்வாக ரீதியாக ஹம்பாந்தோட்டை மாவட்டம் 12 பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் 576 கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 01 மாநகர சபை, 01 நகர சபை 10 பிரதுச சபைகள் மற்றும் 04 துர்தல் தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. ஏனைய பிரிவுகளாக 30 பொலிஸ் அதிகார பிரதேசங்கள், 03 கல்வி வலயங்கள் 17 கமநல சேவை அதிகாரப் பிரதேசங்கள், 12 சுகாதார வைத்திய பிரிவுகளும் காணப்படுகின்றன.


2023 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 680,978 என மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் 334,570 ஆண்கள் என்பதுடன் 346,408 பெண்கள் ஆகும். இதன் பிரகாரம் மக்கள் தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 261 ஆக உள்ளது. இன ரீதியாக, 97.1% சிங்களவர்கள், 0.6% இலங்கைத் தமிழர்கள், 0.1% இந்தியத் தமிழர்கள், 1.2% இலங்கை சோனகர்கள், 1% ஏனைய இனத்தவர்களாக காணப்படுகிறது. மத ரீதியாக 97.1% பௌத்தர்கள், 0.5% இந்துக்கள், 2.2% இஸ்லாமியர்கள், 0.1% ரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் 0.1% ஏனைய கிறிஸ்தவர்கள் ஆவார்கள்.

மாவட்டத்தில் 42,594.76 ஹெக்டெயார் பரப்பளவில் நெற் பயரிச்செய்கை செய்யப்படுகிறது. நெல் பயிரிடப்படும் நிலப் பகுதியின் 34936.90 ஹெக்டெயார் நிலப் பகுதி பாரிய நீர்ப்பாசனம் மூலம் பயிர்ச்செய்கை பன்னப்படுகிறது. கால்நடை வளர்ப்பைப் பொறுத்தவரையில் இங்கு எறுமைத் தயிர் மற்றும் பசும்பால் உற்பத்தி பெருமளவு இடம்பெறுகிறது.

அண்மைக் காலமாக மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் இம்மாவட்டமானது இலங்கையின் பிரதான வர்த்தக மற்றும் முதலீட்டு மையமாக மாறியுள்ளது. கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சமுர்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர்ந்த தற்போது செயற்பாட்டில் உள்ள ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், சர்வதேச விமான நிலையம், நிர்வாக கட்டிடத் தொகுதி, சர்வதேச மாநாட்டு மண்டபம், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், புதிய புகையிரதப் பாதை, அதிவேக நெடுஞ்சாலை முறைமை, சர்வதேச கிரிக்கெட் மைதானம், மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்கா, பறவைகள் பூங்கா, ரிதியகம சபாரி பூங்கா மற்றும் சுற்றுலாக் கருத்திட்டங்கள் மூலம் கிடைக்கும் கிடைக்கப்பெறும் நன்மைகள் ஊடாக மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி மேலும் விரைவுபடுத்தப்படும்.

மாவட்டத்தின் அடிப்படைப் புள்ளிவிபரத் தகவல்கள்

விடயம்	விபரம்
மாவட்டம்	ஹம்பாந்தோட்டை
மாகாணம்	தென் மாகாணம்
மொத்த நிலப்பரப்பு	2609 ச.கி.மீ
பிரதேச செயலாளர் பிரிவுகள் எண்ணிக்கை	12
கிராம அலுவலர் பிரிவுகள் எண்ணிக்கை	576
கிராமங்களின் எண்ணிக்கை	1338
தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை	4 – தங்காலை, பெலிஅத்த, முல்கிரிகல, திஸ்ஸமகாராம
மாநகர சபைகளின் எண்ணிக்கை	1 - ஹம்பாந்தோட்டை
நகர சபைகளின் எண்ணிக்கை	1 - தங்காலை
பிரதேச சபைகளின் எண்ணிக்கை	10 – கட்டுவன, பெலிஅத்த, தங்காலை, அங்குனகொலபெலெஸ்ஸ, அம்பலாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை, சூரியவெவ, திஸ்ஸமகாராம, லுனுகம்வெஹெர, வலஸ்முல்ல
பொலிஸ் அதிகார பிரதேசங்களின் எண்ணிக்கை	30
சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவுகள் எண்ணிக்கை	12
அமைச்சு மற்றும் மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள சுற்றுலா வங்களா மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை	சுற்றுலா வங்களா - 01 உத்தியோகபூர்வ இல்லம் மாவட்ட செயலகம் - 37 பிரதேச செயலகம் - 29
வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை	3
பாடசாலைகள் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை	பாடசாலைகள் எண்ணிக்கை -320 ஆசிரியர் எண்ணிக்கை -7,771
சனத்தொகை	ஆண் - 334,570 பெண் - 346,408 மொத்தம் - 680,978


THE MAP OF HAMBANTOTA DISTRICT
Monaragala District
Ampara District
Ratnapura District
Matara District
INDIAN OCEAN
Lunugamvehera
Tissamaharama
Sooriyawewa
Kataluwa
Weeraketiya
Angunukolapelessa
Ambalantota
Hambantota
Okewela
Tangalle
Beliatta
Legend

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கம்

நிறுவனத்தின் தொலைநோக்கு

"செயற்திறன் வாய்ந்த மாவட்ட நிர்வாகத்தினூடாக சிறந்த மக்கள் சேவை"

நிறுவனத்தின் செயற்பணி

"மக்களின் தேவையை செயற்திறனாகவும் நீதியாகவும் நியாயமாகவும் நட்புறவுடனும் நிறைவேற்றி அரச கொள்கைகளுக்கு ஏற்ப முறையான வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றினூடாக மாவட்டத்தில் பேண்தகு அபிவிருத்தியை உறுதிசெய்தல்.


நிறுவனத்தின் நோக்கம்

- செயற்திறன் மற்றும் பயனுள்ள மாவட்ட நிர்வாகத்தை பேணுதல்.
- பொதுமக்களின் திருப்தியை அதிகரிக்கும் வகையில் அரச துறை மூலம் செயற்திறனுள்ள சேவை வழங்கலை உறுதி செய்தல்.
- சிறந்த மனோபாவம், பொறுப்புக் கூறல், வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துதல், பாரபட்சமற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை போன்றவற்றை அரச சேவையில் ஏற்படுத்தல்.
- அரச துறையில் மனித வள முகாமை தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- அரச அலுவலர்களின் ஓய்வூதியம் தொடர்பான கொள்கைகளுக்கு ஏற்ப நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகள் மற்றும் அதிகார சபைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், நிதி மற்றும் நிதியல்லாத வளங்களை ஈடுபடுத்தல் மற்றும் பின்னாய்வுப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராக செயற்படுவதன் மூலம் மாவட்ட மக்களின் நலனோம்புகை மற்றும் மேம்பாட்டை அதிகரித்தல்.

1.3 பிரதான பணிகள்

- மாவட்ட பாதுகாப்புக் குழுவின் தலைவராக செயற்பட்டு மாவட்ட அதிகார பிரதேசத்தில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மாவட்ட அதிகார எல்லையில் வாழும் மக்களின் பல்வேறுபட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகளை மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்கள் ஊடாக பூர்த்தி செய்தல்.
- மாவட்ட விவசாயம், சுற்றுச்சூழல், அனர்த்தம், முகாமைத்துவம், தொற்றுநோய்க் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் சிறுவர் குழுக்களின் தலைவராக செயற்பட்டு மாவட்டத்தில் உள்ள சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வுக்காக பணியாற்றுதல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் சார்பில் மாவட்டத்தில் அவற்றுக்குரிய வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் திறைசேரிக்கு அனுப்புதல்.
- வெள்ளம், சூறாவளி, வறட்சி, கடல் கொந்தளிப்பு போன்ற அவசரகால சூழ்நிலைகளில் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரண சேவைகள் மற்றும் உதவிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை வழமை நிலைக்கு கொண்டு வரல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், கல்வி மேம்பாடு மற்றும் அறிவுத் திறன் மேம்பாடு.
- மாவட்டத்தில் கலாச்சார, மத மற்றும் பிற தற்கால அரச வைபவங்களை ஏற்பாடு செய்யும் தலைவராக செயல்படுதல்.
- பண்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராகச் செயற்பட்டு மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நிர்வாக நடவடிக்கைகளின் போது உற்பத்தி திறன் மற்றும் தரத்தை அதிகரிப்பதற்காக நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்காக பணிக்குழாத்தினரை ஊக்குவித்தல்.
- மாவட்ட அதிகார பிரதேசத்தில் உள்ள அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவராக செயற்பட்டு, அவ்வந்த நிறுவனங்களின் நோக்கங்கள் , குறிக்கோள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- அனைத்து தேர்தல் நடவடிக்கைகளிலும் அதாவது சனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதியாக, மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தராக செயற்படல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி பற்றிய தகவல்கள்

2023.12.31 இல்

பதவிப் பெயர்	தரம்	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	வெற்றிட ம்	மேலதிகம்
சிரேஷ்ட மட்டம்					
மாவட்ட செயலாளர்	விசேட	1	1	-	-
மேலதிக மாவட்ட செயலாளர்	I	2	1	1	-
பணிப்பாளர் (திட்டமிடல்)	I	1	1	-	-
பிரதம கணக்காளர்	I	1	0	1	
பிரதம உள்ளக கணக்காய்வாளர்	I	1	1	-	-
உதவி மாவட்ட செயலாளர்	III/II	1	1	-	
உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)	III/II	4	5	-	1
கணக்காளர்	III/II	1	1	-	-
பொறியியலாளர்	III/II	2	1	1	-
சிரேஷ்ட மட்டம் மொத்தம்		14	12	3	1
மூன்றாம் நிலை					
நிர்வாக உத்தியோகத்தர்	அதிவிசேட தரம்	1	1	-	-
மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் – தமிழ்) (சிங்களம் – ஆங்கிலம்)	II/I	2	1	1	-
தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர்	2 தரம் II/I	1	0	1	-
மூன்றாம் நிலை மொத்தம்		4	2	2	0
இரண்டாம் நிலை					
அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்	III/II/I	1	0	1	-
வரவு செலவு உதவியாளர்	III/II/I	1	0	1	-
அபிவிருத்தி உத்தியோகத்தர்	III/II/I	35	61	-	26
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	III/II/I	2	1	1	-
திட்டவரைஞர்	III/II/I	1	1	-	-
முகாமைத்துவ உத்தியோகத்தர்	III/II/I	33	22	8	
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்	3 வகுப்பு III/II/I	2	1	1	-
தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்	III/II/I	2	1	1	-
இரண்டாம் நிலை மொத்தம்		77	87	13	26
ஆரம்ப நிலை					
சாரதி	III/II/I/விசேட	10	10	-	-
மின்சார தொழில்நுட்பவியலாளர்	III/II/I/விசேட	1	0	1	1
வங்களா சமையற்காரர்	III/II/I/விசேட	1	0	1	1
அலுவலக உதவியாளர்	III/II/I/விசேட	14	14	-	-
ஆரம்ப நிலை மொத்தம்		26	24	2	2
முழு மொத்தம்		121	125	20	29

மாவட்ட செயலகத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் 12 பிரதேச செயலகங்கள்

1.5.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பிரிவுகள்

1. தாபனப் பிரிவு

தொலைநோக்கு: பணியினை நிறைவேற்றி நோக்கத்தை பூர்த்தி செய்வோம்

செயயற்பணி: மாவட்டத்தில் பேண்தகு அபிவிருத்திக்காக அலுவலக நடவடிக்கைகள் மற்றும் வெளிக்களப் பணிகளின் முறையான ஒருங்கிணைப்பின் மூலம் சிறந்த மக்கள் சேவைக்காக அர்ப்பணித்தல்.

நோக்கம்: மாவட்ட செயலகம் மற்றும் மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் அனைத்து உத்தியோகத்தர்களதும் தாபன நடவடிக்கைகள், அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், துப்பாக்கி அனுமதிப்பத்திரம் மற்றும் வெடிப்பொருட்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்குதல்.

நிறைவேற்றப்படும் பணிகள்

- மாவட்ட செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அனைத்து உத்தியோகத்தர்களதும் தாபன நடவடிக்கைகள்.
- பிரதேச செயலாளர்களின் தனிப்பட்ட கோப்புகளை பேணுதல் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்
- மாவட்டத்தின் அனைத்து கிராம அலுவலர்களினதும் தாபன நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- பிரதேச செயலகங்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல் (துப்பாக்கி அனுமதிப்பத்திரம் மற்றும் வெடிப்பொருட்களுக்கான அனுமதிப் பத்திரம்)
- வாகனங்கள் தொடர்பான அனைத்து பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள்.
- தேர்தல் விடயம் தொடர்புடைய ஒருங்கிணைப்பு பணிகள்.
- பல்வேறு சமூக சேவை நலன்புரி நடவடிக்கைகள்.
- அரச வைபவங்களை ஏற்பாடு செய்தல்.
- அரச உத்தியோகத்தர்கள் குடியிருப்பதற்காக அரசின் பொது வீடுகளை வழங்குதல், வீட பராமரிப்பு மற்றும் வீட்டு வாடனை அறவிடுதல்.
- கலாசார அலுவல்கள், பௌத்த அலுவல்கள் மற்றும் சூழல் நடவடிக்கைகளை வழிநடாத்தல்.
- மனித வள முகாமை அபிவிருத்தி மற்றும் உற்பத்திறன் விருத்திக்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ பணிகளை வழிநடாத்தல்.
- காட்டு யானைகள் மற்றும் இழப்பீடு வழங்குதல் தொடர்பான அனைத்து கடமைகள்
- அபிங் குழுக்கள் தொடர்பான கடமைகள்.
- தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பான கடமைகள்.
- சுற்றுலா இல்லங்களை பராமரித்தல், பேணுதல் தொடர்பான கடமைகள்.
- பிரதேச செயலகங்களின் காணிப் பிரச்சினைகள், பொதுமக்கள் மனுக்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பான கடமைகள்.
- பலா மற்றும் மரங்கள் தொடர்பான கடமைகள்.
- சனாதிபதி அலுவலகத்தில் இருந்து கிடைக்கும் கடிதங்கள் தொடர்பான கடமைகள்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் துப்பரவேற்பாட்டுப் பணிகள தொடர்பான கடமைகள்.

2. கணக்குப் பிரிவு

கணக்குப் பிரிவு – தர ரீதியான நோக்கம்

01. மாவட்ட செயலகம் மூலம் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகள்/ கணக்கு சாராம்சத்தை வருடாந்தம் திறைசேரியால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் பிரகாரம் அனுப்புவதை 100% வெற்றியடையச் செய்தல்.

02. கிடைக்கும் கடிதங்களுக்கான பதில்களை 03 தினங்களுக்குள் அனுப்புதல்.

03. குறைபாடுகள் இல்லாத வவுச்சர்களுக்கு மூன்று தினங்களுக்குள் கொடுப்பனவு செலுத்துதல்.

04. முற்பண விண்ணப்பம் மற்றும் கைவசம் உள்ள பற்றுச்சீட்டு அறிக்கைகளை ஒவ்வொரு மாதமும் ஆரம்பிக்கப்பட்டு 03 கடமை நாட்களில் அனுப்புதல்

05. வங்கி இணக்க முன்னேற்ற அறிக்கையை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல்.

06. ITMIS முறைமையின் பிரகாரம் முற்பணக் கோரிக்கை அறிக்கையை ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு முன்னர் அனுப்புதல்.

தரக் கொள்கை

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகமானது மாவட்டத்தின் முன்னணி சமூக நிர்வாக சேவை வழங்குணராக செயற்படுவதுடன் எப்பொழுதும் "சேவை பெறுநர்களுக்காக தன்னை அர்ப்பணித்துள்ளது"

ஆகவே,

- மாவட்ட செயலகத்தை செயற்திறன் மற்றும் வனைத்திறனுடன் நிர்வகிப்பதற்கும்,
- சேவைச் செயன்முறைகளை இனம் கண்டு பராமரித்து அளவீடு செய்து மற்றும் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும்,
- சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டு உற்பத்தி திறனை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கும்,
- மாவட்ட செயலகத்தை சமூகப் பொறுப்புடன் முகாமை செய்வதற்கும் மற்றும்
- ISO 9001 – 2008 தரநியம முகாமைத்துவ முறைமையின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நவடிக்கை எடுப்பதற்கும் கட்டுப்பட்டுள்ளோம்.

மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவின் கட்டமைப்பு மற்றும் கடமைப்பொறுப்பு

மாவட்ட செயலகத்தன் தொலைநோக்கு மற்றும் டிநயற்பணி என்பவற்றுக்கு அமைவாக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் போது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டுப் பணிகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. மாவட்ட செயலகமானது அரசின் நிதிச் செயற்பாடுகளின் போது A தர திணைக்களமாக கருதப்படுவதுடன் அரசின் வருடாந்த மதிப்பீட்டில் 263 ஆம் செலவு விடயத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டுக்காக நிதி வசதி வழங்கப்பட்டது. நிதி நடவடிக்கைகளின் போது மாவட்ட செயலாளர் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற ரீதியில் பொறுப்புக் கூறுதல் வேண்டு.

கட்டமைப்பு

01 நிர்வாக கணக்குப் பிரிவு: கருத்திட்டம் 01 மற்றும் 02 நிதி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை

02. கணக்குப் பிரிவு: மாவட்ட செயலகம் தொடர்பான சாதாரண நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள்

பிரதான பணிகள்

நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது மாவட்ட செயலகத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான பணிகளாவன,

- வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான ஒதுக்கீடு மற்றும் அதன் பிரகாரம் மாதாந்தம் திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் முற்பணங்களை பகிர்ந்தளித்தல், முகாமை செய்தல், மேற்பார்வை மற்றும் நிர்வகித்தல்.
- பிரதேச செயலகம் மூலம் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அரசின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல், ஏற்புடைய கொடுப்பனவுகளை செலுத்துதல் மற்றும் வருமானம் சேகரித்தல்
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராக மேற்கொள்ளப்படும் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளை செலுத்துதல் மற்றும் வருமானம் சேகரித்தல் மற்றும் மாற்றுதல்.
- பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் போது அதற்கு ஏற்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

3. மாவட்ட திட்டமிடல் செயலகம்

தொலைநோக்கு : ‘‘பேண்தகு அபிவிருத்தியின் முன்மாதிரியான மாவட்டமாக மாற்றமடைதல்’’

செயற்பணி : ‘‘மாவட்டத்தின் மக்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் விதமாக அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்திறன் மற்றும் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்த முடியுமானவாறு திட்டங்களைத் தயாரித்தல், வழிநடாத்தல், மதிப்பீடு செய்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை செயற்திறனுடன் நிறைவேற்றுவதன் மூலம் பேண்தகு அபிவிருத்திக்கு உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குதல்.’’

பிரதான பணிகள்

- மாவட்ட மீளாய்வுக் குழு மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான பிரதான கூட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடாத்துதல்.
- மாவட்டம் தொடர்பான அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- ஏனைய நிரல் அமைச்சின் நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மாவட்டத்தில் ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடாத்தல்.
- மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்டத்தில் கடமை புரியும் அலுவலர்களின் நிர்வாக மற்றும் தாபனப் பணிகள்.
- மாவட்டத்தில் அரச முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
- மாவட்டத்தில் வளப் பயன்பாட்டின் போது முக்கியம் பெறும் ‘‘வள விவரம்‘‘ தயாரித்தல்
- நடைமுறைத் தேவைகளின் பிரகாரம் தகவல்களை ஒன்றுசேர்த்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்தல்.

4. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

தொலைநோக்கு: 20230 ஆம் ஆண்டளவில் வறுமையிலிருந்து விடுபட்ட பலம்பொருந்திய, சௌபாக்கியம் நிறைந்த இலங்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் முன்னணி நிறுவனமாக மாற்றமடைதல்.

செயயற்பணி: ஓரங்காட்டலுக்கு ஆளாக்கப்பட்ட மக்களைப் பலம்பொருந்தச் செய்தல் (பொருளாதார, சமூக, அரசியல், பௌதீக, உளரீதியான, சட்ட ரீதியான மற்றும் சூழல்) மற்றும் பிரதேச முரண்பாடுகளை குறைப்பதற்காக செயற்திறன், வினைத்திறன், விரைவான மற்றும் பயனுள்ள தீர்வுகளை மக்கள் நேயத்துடன் நடைமுறைப்படுத்துவதற்காக திணைக்கள, சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் நுண்கடன் நிறுவன வலையமைப்பு மற்றும் தொழில்வாண்மையாளர்கள், அரசு, தனியார் துறையினர் மற்றும் அரசியல் துறைகளின் முறையான பங்களிப்பு மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பங்களிப்புடன் வறுமையில் இருந்து விடுபட்ட சௌபாக்கியமான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்

01. ஏழைக் குடும்பங்களின் பொருளாதாரத்துக்கு வலு சேர்ப்பதற்காக நிவாரண உதவிகள் வழங்குதல் மற்றும் கட்டாய சேமிப்புக்காக மக்களை பங்களிக்கச் செய்தல்.
02. சிறிய குழு முறைமைக்குள் மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் சமூக உயிரோட்டத்துக்கு பங்களிப்புச் செய்தல்.
03. சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி போதை நிவாரணம், கடுமையாக வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், பாடசாலை செல்லாத பாடசாலை வயதில் உள்ள சிறுவர்களை பாடசாலைக்கு அனுமதித்தல், சிறுவர்களின் சமூக கலாசார அறிவு மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், சட்ட ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
04. சேமிப்பதற்காக மக்களை ஊக்குவித்தல் மற்றும் பழக்கப்படுத்தல்.
05. முதலீட்டு வாய்ப்புக்களுக்காக மக்களை ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல்.
06. வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
07. விற்பனை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி சந்தை வாய்ப்புக்களை மக்களுக்கு வழங்குதல்.
08. வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலதன (நிதி மற்றும் உபகரணம்) தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
09. சமுர்த்தி வங்கி முறையுடன் மக்களை இணைப்பதன் மூலம் அவர்களிடம் நிதி ஒழுங்கினை ஏற்படுத்தல்.
10. எளிய மற்றும் மக்களுக்கு வழங்க முடியுமான பிணையங்களின் அடிப்படையில் கடன் வழங்குதல்.
11. இளம் சமுதாயத்தினரை பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்வதை இலக்காக கொண்டு வங்கி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
12. சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டம் மூலம் மக்களை காப்புறுதி முறைக்கு பங்களிக்கச் செய்தல் மற்றும் இந்த நிதியங்களை பயன்படுத்தி உயர்தரக் கல்வி கற்கும் ஏழைக் குடும்பங்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.
13. உள்நாட்டு மற்றும் உலக உதவி சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து நாட்டின் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக மக்களை ஊக்குவித்தல்.

இவ் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிக்கும் மக்களை உருவாக்குதல்.

5. பொறியியல் பிரிவு

தொலைநோக்கு: செயற்திறன்வாய்ந்த மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முதன்மைவாய்ந்த மக்கள் சேவை

செயயற்பணி: மக்களின் தேவைளை செயற்திறனுடனும் நியாயமாகவும் நேர்மையுடனும் நட்புறவுடனும் மேற்கொண்டு அரச கொள்கைக்கு அமைவாக முறையான வள முகாமைத்துவம், ஒருங்கிணைப்பு என்பன மூலம் மாவட்டத்தில் பேண்தகு அபிவிருத்தியை உறுதிசெய்தல்

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

மாவட்டத்தின் நிர்மாணிப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்து மக்களது தேவைகளை நிறைவுசெய்தல்.

6. சமூக சேவைகள் பிரிவு

தொலைநோக்கு: 2030 ஆம் ஆண்டளவில் ஓரங்காட்டலுக்கு ஆளாகிய மற்றும் பிரதிகூலமான நிலைக்கு ஆளாகிய மக்களின் உரிமைகள் மற்றும் சமத்துவமான பாதுகாப்பான ஓர் இலங்கையை உருவாக்கும் முன்னோடியாகுதல்.

செயயற்பணி: இலக்கு நோக்கிய சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டல் மூலம் சமூக உள்ளடக்கத்திற்கான நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்வாண்மை தலையீட்டின் மூலம் புத்தாக்க அணுக்கத்தின் ஊடாக விரைவாகவும் செயற்திறனுடனும் பயனுள்ளவாறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கொள்கை தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபயன்களை அடைந்து கொள்ளல்.

பிரதான பணிகள்

- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்காக தொழிற் சந்தைகளை இனம் காணல் மற்றும் விரிவுபடுத்தல்
- அங்கவீனமுற்ற நபர்களின் நடைமுறைத் தேவைகள் மற்றும் போக்குகளை இனம் காண்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு துணைக்கருவிகள் வழங்குதல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களை வலுவூட்டல்
- விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு நேரகாலத்துடன் தலையீடு செய்வதன் மூலம் அவர்களை விசேட கல்விக்கு அனுப்புதல்
- சேவை வழங்கும் அலுவலர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளை நடாத்துதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்.
- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் சிறுவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- கண்பார்வை குன்றிய சிறுவர்களுக்கு விளையாட்டு, கல்வி மற்றும் கலாசார ரீதியான உதவி வழங்குதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல்
- சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல்.
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல்.

7. விசாரணைப் பிரிவு

தொலைநோக்கு : ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஊழல் மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்காக செயற்படும் முக்கியமான செயற்திறன் மற்றும் பயனுள்ள பிரிவாக மாற்றமடைதல்.

செயயற்பணி: ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரின் கீழ் காணப்படும் அரச நிறுவனங்களின் நல்லாட்சிக்குத் தேவையான குணாதிசயங்களைக் கொண்ட நிர்வாக கட்டமைப்பை பேணிச்செல்வதை உறுதிசெய்வதற்காக ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக செயற்படல் மற்றும் வழிநடாத்துதல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

பொதுமக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பில் செயற்படுவதாகவும் அதற்கு நியாயமான பதில் வழங்குவதாகவும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:-

- ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட செயலாளரின் கீழ் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அலுவலக நடவடிக்கைகள் மற்றும் அலுவலர்களுக்கு எதிராக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ளல், விசாரணை அறிக்கை தயாரித்தல் மற்றும் குற்றச்சாட்டு வரைவினை தயாரித்தல்.
- முறைசார்ந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது சாட்சியம் வழங்குதல் மற்றும் முறைப்பாட்டை விசாரித்தல்.
- மாவட்ட செயலாளர் விதிக்கும் ஏனைய கடமைகளை நிறைவேற்றல்.

8. மாவட்ட தொகைமதிப்பு புள்ளிவிபர அலுவலகம்

தொலைநோக்கு: நாட்டின் அபிவிருத்தி அபிலாசைகளை அடைந்துகொள்வதற்காக நடைமுறைத் தகவல்களை வழங்குபவர்களுள் பிராந்தியத்தின் முன்னோடியாக மாற்றமடைதல்.

செயயற்பணி: பூகோளமயப்படுத்தல் பின்னணியில் சுபீட்சமான ஒரு தேசமாக மாற்றமடைவதற்காக நவீன தொழிநுட்பம், ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தந்திரோபாய தலைமைத்துவத்தின் ஊடாக மிகவும் பயனுள்ளவாறு இற்றைப்படுத்தப்பட்ட சரியான தரவுகளை வழங்குவதன் மூலம் துசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் போது போதுமான அளவு தரவுகள் மற்றும் தகவல்கள் இல்லாதது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்ற இவ்வாறான ஒரு காலகட்டத்தில் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக திட்டம் தயாரிப்பதற்காக புள்ளிவிபர தகவல்களை இற்றைப்படுத்தி பேணிச் செல்லல் புள்ளிவிபரப் பிரிவின் பிரதான நோக்கமாகும்

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலக புள்ளிவிபரப் பிரிவானது சனத்தொகை, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள், கல்வி, சுகாதாரம், தொழிற்படை, அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான தகவல்கள் உள்ளடங்கிய பல்வேறு துறைகள் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள் மற்றும் தகவல்களை சேகரிக்கிறது.

09. அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் அலுவலகம்

தொலைநோக்கு : உரியவாறு பாதுகாக்கப்பட்ட வாடிக்கையாளர் சமூகத்திற்காக சரியானதும் விசுவாசமானதுமான அளவீட்டு முறைமையொன்றை பேணிச் செல்லல்.

செயயற்பணி: தேசிய அளவீட்டு முறைமை தொடர்பான பொறுப்பினை ஏற்று அளவீட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் மற்றும் பரிமாற்றச் செயற்பாட்டின் போது நீதி நியாயத்தை நிறைவேற்றும் முதற்தர அளவீட்டு விஞ்ஞானம் நிறுவனமாக மாற்றம் பெறல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

இலங்கையின் முதற்தர அளவீட்டு விஞ்ஞான நிறுவனமாக பணியாற்றுதல் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அடிப்படை அளவீட்டு விஞ்ஞானம், கைத்தொழில் அளவீட்டு விஞ்ஞானம் மற்றும் சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:-

- 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்படும் பணிகளை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தல்.
- மாவட்ட ஆய்வுகூடங்களை பேணிச் செல்லல்.
- கைத்தொழில் துறைகளில் பயன்படுத்தப்படும் அளவீட்டு இலக்கங்களை திருத்துதல்.
- வியாபார மற்றும் வர்த்தக துறையில் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்கள் மற்றும் படிகளை சீர்திருத்துதல்.
- சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான நுகர்வோர் கல்வி.

10. நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை

தொலைநோக்கு : சிறந்த வர்த்தக தர்மத்தை மதிக்கும் வர்த்தக சமூகத்தில் பாதுகாப்பான நுகர்வோரை உருவாக்குதல்.

செயயற்பணி: வர்த்தக சமூகத்தில் சிறந்ததொரு போட்டியை விருத்திசெய்து நுகர்வோரை பலமடையச் செய்வதனூடாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல்.

நோக்கம்/ குறிக்கோள்

- நுகர்வோர்களது உயிர், உடைமைகளுக்கு தீங்கு விளைவிக்கும் பண்டங்களை விற்பனை செய்தல் மற்றும் சேவை வழங்குதலுக்கு எதிராக செயற்பட்டு நுகர்வோரைப் பாதுகாத்தல்.
- நியாயமற்ற சந்தைக் கொள்கைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தலும் அவர்களது உரிமைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதை உறுதிசெய்தல்.
- இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நுகர்வோருக்கு போட்டி விலைகளில் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு போதியளவு பிரவேசத்தை வழங்குதல்.
- நுகர்வோரை சுரண்டும் வகையில் வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குதல்

நிறைவேற்றப்படும் பணிகள்:-

1. தொழில் முயற்சிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள்
2. தொழில் முயற்சிகளுக்கிடையிலான விலைகள் தொடர்பான வேலைத்திட்டங்கள்
3. சந்தைக்கு உள்ளே அல்லது சந்தையில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியில் உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தனியுரிமை நிலைமையை முறைகேடாக பயன்படுத்துதல் அல்லது
4. உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்திற்கு அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு பாதக விளைவை ஏற்படுத்தும் போட்டித் தன்மை தொடர்பான தடைகளைக் கட்டுப்படுத்தல் அல்லது அகற்றுதல்.

- போட்டித் தன்மைக்கு எதிரான போக்கு மற்றும் தனியுரிமை நிலைமையினை முறைகேடாக பயன்படுத்துதல் தொடர்பாக புலனாய்வு அல்லது விசாரணை மேற்கொள்ளல்.
- பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குனரிடையே வினைதிறனுடைய போட்டித் தன்மையினை பேணிச் செல்லலும் மேம்படுத்தலும்
- பண்டங்கள் சேவைகளினது விலைகள், அவற்றைப் பெற்றுக்கொள்ள முடிதல் மற்றும் அவற்றின் நிலைமைகள், விநியோகிக்கப்படும் தரங்கள் தொடர்பாக நுகர்வோர், கொள்வனவாளர்கள் மற்றும்

பண்டங்கள் சேவைகளைப் பயன்படுத்துவோரது உரிமைகளையும் உறவுகளையும் மேம்படுத்தலும் பாதுகாத்தலும்.

- கொள்வனவிற்காக வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் சேவைகளின் நிலைமை, அளவு, பலம், சுத்தம், தரம் மற்றும் விலைகள் தொடர்பாக நுகர்வோருக்கு அறிவூட்டுதல்.
- இச்சட்டத்தில் குறிப்பாக சொல்லப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக புலனாய்வு அல்லது விசாரணை மேற்கொள்ளல்.
- சந்தைப் போட்டி நிலைமை குறைந்த வினைத்திறனுடையதாக உள்ள சந்தர்ப்பங்களில் சந்தையில் போட்டித் தன்மை விளைகளை மேம்படுத்தல்.
- சந்தை நிலைமை மற்றும் நுகர்வோரின் செயற்பாடுகள் தொடர்பான ஆய்வுகளைப் பொறுப்பேற்றல், அறிக்கை வெளியிடல் மற்றும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.
- அரச துறையினதும் தனியார் துறையினதும் செயற்திறன் தொடர்பான ஆய்வுகளைப் பொறுப்பேற்றல்.
- நுகர்வோர்களது முறையான சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கட்டுக்காப்பு ஆகியன தொடர்பான நுகர்வோர் கல்வியை மேம்படுத்தல்.
- சந்தை நிலைமைகள் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான தகவல்களை ஏனைய நிறுவனங்களுடன் பரிமாற்றப்படுவதை மேம்படுத்தல்.
- நுகர்வோர் அமைப்புக்களை தாபிப்பதனை மேம்படுத்தல், உதவுதல் மற்றும் ஆர்வமூட்டுதல்.
- அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைக்காக கட்டணம் அறவிடல்.
- அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கான வசதிகளை வழங்குவதற்குத் தேவையான விதத்தில் ஏதேனுமொரு வகையிலான குழுவை அல்லது குழுக்களை நியமித்தல் மற்றும்,
- அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் அதிகார சபையின் பணிகளை வினைதிறனுடன் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

11. காணிப் பாவனை திடமிடல் பிரிவு

தொலைநோக்கு: மாவட்டத்திலுள்ள காணி வளத்தினை மிகச் சிறந்த முறையிலும் நிலைத்திருக்க கூடியவாறும் பயன்படுத்துதல்.

செயயற்பணி: எமது தரப்பினரும் பூமியை உபயோகிப்பவர்களும் திருப்தியடையும் வண்ணம் செயற்திறனுடன் சேவைக்கு அர்ப்பணிக்கும் பணிட்டொகுதியினர் மூலம் சுற்றாடல் சமநிலையைப் பேணி நிலையாகவும் உன்னதமாகவும் பூமியைப் பயன்படுத்துவதற்கு உதவுதல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

பொதுவாக ஒட்டுமொத்த சமூகமும் பயனடையும் விதமாக காணி வளத்தினைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல், அபிவிருத்தி செய்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:

- மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராமிய மட்டத்திலான காணிப் பாவனைத் திட்டத்தனை வகுத்தல்.
- பல்வேறு பணிகளுக்குப் பொருத்தமான அபிவிருத்தி செய்யப்படாத அல்லது பயன்படுத்தப்படாத அரச காணிகளை இனங் காணல்
- காணி தொடர்பான தகுதித் தரம் பிரித்தலை மேற்கொண்டு கணணிமயப்படுத்தப்பட்ட தரவுத் தளம் ஒன்றைத் தயாரித்தல்
- தேசிய மட்டத்திலான காணிப் பாவனை ஆய்வுப் பணிகளுக்கு பங்களிப்புச் செய்தல்.
- மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான காணிகளை இனங் காணுதல் மற்றும் விடுவிப்பதற்கான மாவட்ட காணிப் பாவனை குழுக்களை நடாத்துதல்

- பிரதேச செயலகப் பிரிவினுள் காணிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் ஒதுக்குதல் போன்ற விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதேச காணிப் பாவனை குழுக்களை நடாத்துதல்
- பிழையான காணிப் பாவனை காரணமாக ஏற்படக் கூடிய பாதக விளைவுகளை குறைக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், காணிப் பாவனை தொடர்பான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்காக பல்வேறு மட்டங்களில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- பிரதேச காணிப் பாவனை திட்டப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கருத்திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- பாதிக்கப்பட்ட காணிகளை மறுசீரமைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- கிராமிய மட்டத்தில் காணிப் பாவனை திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- காணித் துண்டுகள் ரீதியாக காணிப் பாவனை திட்டமிடல் மாதிரிகளை தாபித்தல்
- காணிப் பாவனைப் பிரச்சினைகளுடைய காணிகள் தொடர்பான விசேட கருத்திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு அமைவாக பல்வேறு தேவைகளுக்குப் பொருத்தமான காணிகளை இனங் காண்பதற்கு காணி மதிப்பீடுகளை மேற்கொண்டு காணித் தகுதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- பேண்தகு பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
- துணை நீர் உதவி பிரதேசங்களை அடிப்படையாக கொண்டு காணிப் பாவனை திட்டங்களை தயாரித்தல்.
- மண் மற்றும் நீர்ப்பாதுதகாப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- காணிப் பாவனை தொடர்பான விசேட ஆய்வுகளை மேற்கொள்ளல்.

12. காணி, விவாகம், பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகம் – ஹம்பாந்தோட்டை

தொலைநோக்கு : பேண்தகு அபிவிருத்தியின் மூலம் பயனுள்ள அரச சேவையை நிறைவேற்றல்

செயயற்பணி : இலங்கையின் அசையும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான சட்டரீதியான ஆவணங்களைப் பதிவுசெய்தல் மற்றும் மக்கள் வாழ்வின் பிரதான வீட்டு நிகழ்வுகளான திருமணம், பிறப்பு, இறப்பு என்பவற்றைப் பதிவு செய்வதன் மூலமும் அவ் ஆவணங்களின் உறுதிசெய்யப்பட்ட பிரதிகளை வழங்குவதன் மூலமும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மக்களுக்கு உதவுதல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

கவர்ச்சியானதும் செயற்திறன் வாய்ந்ததும் நற்புறவானதுமான மக்கள் சேவையினைப் பேணிச் செல்வதன் மூலம் கிடைக்கப்பெறும் சகல உறுதிகளினதும் பணிகளை அதே தினத்தில் பூர்த்தி செய்தலும் கிடைக்கப்பெறும் சகல பிரித்தெடுப்பு பிரதிகளுக்குமான விண்ணப்பங்கள் தொடர்பில் 20 நிமிடங்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதலும் எமது நோக்கமாகும்.

13. தொழில் வழிகாட்டல் மற்றும் மனித வளப் பிரிவு

தொலைநோக்கு: உலகலாவிய இலங்கையர்களைக் கொண்ட தொழிற்படை

செயயற்பணி : ''பரந்துபட்ட திறன்களைக் கொண்ட செயலூக்கமான மற்றும் பூகோள ரீதியாக போட்டித்தன்மை வாய்ந்த ஊழியர் படையொன்றை கட்டியெழுப்புதல் மற்றும் எமது மனித வளங்களின் முழுப் பலத்தினையும் இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதல்.''

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

பூகோள ரீதியாக போட்டித் தன்மை வாய்ந்த, திறன் மற்றும் பல்துறை ஆற்றல்களைக் கொண்ட இலங்கையர்களின் தொழிற்படை ஒன்றை கட்டியெழுப்புதல்.

வேலையின்மையை குறைப்பதற்காக பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

ஒழுங்கமைக்கப்பட்ட பரிபூரணமான ஊழியப்படை தகவல் முறைமை ஒன்றை ஏற்படுத்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்

- தேசிய மனிதவளக் கொள்கையை தயாரித்து கொள்கை மற்றும் ஏற்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- திறன் பொருத்தமின்மை எனும் கட்டமைப்பு ரீதியான வேலையின்மை பிரச்சனையை நிவர்த்தி செய்தல்
- தற்போதைய தொழிற் படையைச் சேர்ந்த மற்றும் எதிர்காலத்தில் தொழிற் படைக்கு சேரவிருக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் சரியான தொழில் திசையைத் தீர்மானிக்க வசதி செய்தல்.
- மனிதவலுவைத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் எதிர்வுகூறல்
- முறைசாரா துறையின் அபிவிருத்தி
- தனியார் துறை வேலைவாய்ப்புக்காக வேலை தேடுபவர்களை ஊக்குவித்தல்
- சுதந்திர அரச வேலைவாய்ப்பு சேவையை வழங்குதல்
- பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டுள்ள குழுக்கள், ஊனமுற்ற நபர்கள் மற்றும் வளர்ச்சியடையாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான வசதிகளை வழங்குதல்
- உலகளாவிய மற்றும் உள்நாட்டில் சரியான தொழில் சந்தை தகவல்களை அனைத்து இலங்கையர்களுக்கும் வழங்குதல்.
- உள்நாட்டு மற்றும் உலகளாவிய தொழிற் சந்தை போக்குகளை எதிர்வுகூறல்.

14. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு

தொலைநோக்கு : மிகவும் பாதுகாப்பான இலங்கையை நோக்கி.

செயயற்பணி : இயற்கை மற்றும் மனிதர்களால் விளைவிக்கப்பட்ட அனர்த்தங்களை பயனுள்ளவாறு தடுத்தல் மற்றும் குறைப்பதன் மூலம் அமைதியான, சுபீட்சமான மற்றும் கௌரவமான மனித வாழ்வுக்குரிய வாசஸ்தானம் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்தல்

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் பணிகள் பின்வரும் பிரதான துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. இயற்கை மற்றும் மனித செயற்பாடு காரணமாக ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து மக்களின் வாழ்வு, சொத்துக்களைப் பாதுதகாத்தல் (தடுத்தல், குறைத்தல், முன்னாயத்தம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
2. நெகிழ்ச்சியான ஒரு சமூகத்திற்கான சமூக பாதுகாப்பை உறுதி செய்தல். (முன்கூட்டிய எச்சரிக்கை, அவசர நடவடிக்கைகள், மீட்பு மற்றும் நிவாரண சேவைகள்)

3. அனர்த்தத்துக்கு பிந்திய அனர்த்தங்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு வசதியளித்தல் (வழமை நிலைக்கு கொண்டுவரல், புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு)

நிறைவேற்றப்படும் பணிகள் -

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2010 நவம்பர் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் அமைச்சிடம் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- இயற்கை அனர்த்தம் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவம்
- அனர்தங்களைக் குறைத்தல், பதில்குறி தெரிவித்தல் மற்றும் மீட்பு பற்றிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல்
- குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான தேசிய திட்டங்களை அதிகாரிகளுடன் இணக்கம் தெரிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் வரவு செலவுத் திட்டத்தின் வளங்களைக் கொண்டு மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் வழிநடாத்தல்.
- தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் அவசரகால நிலைமை செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்.
- அனர்த்தங்களைக் குறைத்தல், பதில்குறி தெரிவித்தல் மற்றும் மீட்பு ஆகியன தொடர்பில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- மேற்கூறிய பணிகள் உரிய நேரத்தில் செயற்படுவதனை உறுதி செய்வதற்காக அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- இயற்கை அனர்த்தம் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- வெள்ளம், வறட்சி, மண்சரிவு, தொற்றுநோய்கள் மற்றும் ஏனைய விசேட காரணங்களால் ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்குதல்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் போது மீட்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- முன்கூட்டிய அபாய எச்சரிக்கை முறையை செற்படுத்தல்
- வீடுகள் மற்றும் கட்டிட நிர்மடாணிப்பு தொழில்நுட்ப துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள், வளிமண்டலவியல் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்.
- அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஏனைய அனைத்து விடயங்கள் மற்றும் மேற்பார்வை பணிகள்.

14. கலாசார பிரிவு

தொலைநோக்கு : சாந்தமானதும் நிறைவானதும் விருத்தியடைந்ததுமான மனிதர்களைக் கொண்ட ஒரு தேசத்தை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்.

செயயற்பணி: இலங்கையின் தனித்துவமான இலக்கிய கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல், வியாபித்தல் ஆகியவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கலாசார செயற்பாடுகளை செயற்திறனுடனும் உற்பத்தி திறனுடனும் நடைமுறைப்படுத்தல்.

- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் இலக்கியக் கலையினைப் பாதுகாத்தல் மற்றும் பரப்புரைக்குத் தேவையான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களை கலாசாரத்தின் உறுப்பினர்கள் எனக் கருதி அவர்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் கலை ஆக்கங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை பல்கலாசார மாவட்டமாக கருதி அனைத்து துணைக் கலாசாரங்களுக்கும் நியாயமான முறையில் அவர்களது கலை மற்றும் கலை நுட்பக்களையும் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பரப்புரைக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்புல மற்றும் கட்புலனற்ற கலாசார அங்கங்களுக்கு புத்துணர்ச்சியளித்து அவற்றை சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் சென்றடையும் வகையிரான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலூடாக நற்பண்புகள் நிறைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்.

16.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

தொலைநோக்கு: இலங்கையிலுள்ள பிள்ளைகளுக்காக சிறுவர் நேய மற்றும் பாதுகாப்பான ஒரு சூழலை உருவாக்கும் சிறப்பான ஒரு மத்திய நிலையமாக மாற்றுதல்

செயயற்பணி : சகலவிதமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் இலங்கையின் அனைத்து பிள்ளைகளினதும் பாதுகாப்பினை உறுதிசெய்தல்.

நோக்கம் :

- சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் பாதுகாப்பு மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக அனுப்புதல் ஆகிய அனைத்துக்குமான தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான அனைத்து செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

17. சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு

தொலைநோக்கு: நிலைபேரான அபிவிருத்திக்கான தொழில் முயற்சியான்மையும் தொழில் அபிவிருத்தியும்.

செயயற்பணி: இளைஞர் யுவதிகள் தொழில்முயற்சியான்மைத் துறையில் தொழில்வாய்ப்புப் பெறுவதனூடாக தொழிலின்மையினைக் குறைத்து புதிய சவால்களை எதிர்கொள்ள முடியுமான நிலையான சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் துறையின் பங்களிப்பினை தேசிய பொருளாதாரத்துடன் சேர்த்தல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

- தொழில்வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல்.
- ஆட்டம்கொள்ளாத தொழில் முயற்சியான்மைக் கலாசாரத்தினை கட்டியெழுப்புதல்.
- வெற்றிகரமான வணிக வாய்ப்புக்களை இனங்காண்பதற்கு இளைஞர் யுவதிகளுக்கு உதவுதல்.
- சிறு வணிகங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு அவ் வணிகங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- சிறு வணிக அபிவிருத்தி துறையுடன் தொடர்பான அரச கொள்கைகளை விருத்தி செய்வதற்கு உதவுதல்.
- சிறு தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான சந்தை வாய்ப்புக்களை விரிவாக்கல்.
- ஏற்றுமதியை மையமாக் கொண்ட வணிக முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு சிறு வணிகர்களை ஊக்குவித்தல்.
- பல்வேறு துறைகள் தொடர்பாக தொழில்முயற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்.

18. சமூக பாதுகாப்பு சபை

தொலைநோக்கு : உற்பத்தித்திறனுடையதும் நிலைபேரானதுமான சமூகப் பாதுகாப்பின் பொருட்டு நாட்டின் முதற்தரமான நிறுவனமாக மாறுதல்

செயயற்பணி: பங்கேற்பு மற்றும் ஆக்கபூர்வமான அமைப்புச் சூழல் ஒன்றின் மூலம் அரச பாதுகாப்புடன் கூடிய மிகவும் விளைதிறனுடைய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் தேசிய நிறுவனமாக மாறி சுதந்திர பிரசைகளை உருவாக்குவதற்கு பங்காற்றுதல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரச ஓய்வூதிய சம்பளம் பெறாத மக்களுக்கு அறிவூட்டுதல்.

நிறைவேற்றப்படும் பணிகள் :

- மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மாவட்டத்தில் உள்ள இலக்கு வைக்கப்பட்ட சமூகத்தினரை அறிவூட்டுதல் மற்றும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

19. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

தொலைநோக்கு : அரச நிதிக் கொள்கைகளின் பிரகாரம் சிறந்த அரச சேவையொன்றை பேணிச் செலவதற்கு பங்களிப்புச் செய்தல்.

செயயற்பணி : மாவட்ட செயலாளரின் அதிகாரக் கட்டமைப்பிற்குட்பட்ட அரச நிறுவனங்கள் அரச நிதிக் கொள்கைகளுக்கு எற்ப செயற்படும் வழிகாட்டியொன்றாக சுதந்திரமான ஒரு தரப்பினராக சேவை வழங்குவதனூடாக மாவட்டத்தினுள் சிறந்த அரச சேவையொன்றை பேணிச் செல்லல்

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

- அரசின் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப உள்ளக கணக்காய்வினை பேணிச் செல்லல்.
- மக்களுக்கு உன்னத சேவையினை வழங்குவதற்குத் தேவையான சூழ்நிலையினைக் கட்டியெழுப்புதல்.
- மக்களுக்கு தரமான சேவை வழங்கப்படுகின்றனவா எனக கண்டறிதல்.
- அரச நிறுவனங்களுக்குத் தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் வழிகாட்டல்.
- அரச வளங்களை முறைகேடானவாறு பயன்படுத்துவதை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

நிறைவேற்றப்படும் பணிகள்

- ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மற்றும் பிதேச செயலகம் ஆகியவற்றை கணக்காய்வு செய்தல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு என்பவற்றை நடாத்துதல் மற்றும் பிரதேச செயலகங்களின் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்களில் பங்குபற்றுதல்.
- நிதி மற்றும் உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக ஆலோசனை வழங்கலும் வழிகாட்டலும்.
- மாவட்ட செயலாளரினால் ஒப்படைக்கப்படும் விசேட கணக்காய்வுகளை மேற்கொள்ளல்
- புலனாய்வு நடவடிக்கைகள்.

20. உற்பத்தி திறன் மேம்பாட்டுப் பிரிவு

தொலைநோக்கு : உற்பத்தி திறனை மேம்படுத்துவதில் ஆசியாவின் முக்கிய கேந்திர நிலையமாக மாற்றுதல்

செயயற்பணி : இலங்கையில் உற்பத்தி திறனை மேம்படுத்துவதனூடாக சர்வசே போட்டி நிலைமையினை எதிர்கொள்வதற்குத் தேவையான பலத்தினை வழங்குதல் மற்றும் சேய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் மக்களுக்கு உயர்வான வாழ்க்கைத் தரத்தை உரித்தாக்குதல்.

குறிக்கோள்:

- முதலாவதாக நுகர்வோர்
- அறிவு பரிமாற்றம்
- கற்றல் கலாசாரம்
- குழுச் செயற்பாடுகள்
- உற்பத்தி திறன் மற்றும் தரமான சேவை
- தேசிய அபிவிருத்திக்கு முன்னுரிமை

21. பௌத்த அலுவல்கள் பிரிவு

தொலைநோக்கு: ‘‘பௌத்த மரபுகளைப் பேணும் நெறிமுறையான சமூகமொன்றை நோக்கி ’’

செயயற்பணி: புத்த சாசனத்தின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான பணிகள் மற்றும் செயற்பாடுகளை உரியவாறு ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவதனூடாக உள்நாட்டு பௌத்த மக்களின் மறுமலர்ச்சிக்கு ஏதுவாயமையும் நெறிமுறையானதும் பண்பாடானதுமான சமூகத்தை உருவாக்குதல் மற்றும் முன்மாதிரியானதோர் பௌத்த சமூகத்தின் தொடர்ந்தேச்சியான இருப்பினை நிலைநாட்டுதல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

- மாவட்டத்தின் அனைத்து விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்குதல்.
- அறநெறிப் பாடசாலை பெறுபேறுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் மாவட்டத்தை முதலாம் இடத்திற்கு கொண்டுவரல்.
- மாவட்டத்தின் அனைத்து விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைக்கும் ஒரே விதமான நன்மைகள் கிடைப்பதற்கு வழிவகுத்தல்..
- பௌதீக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் சமநிலையான அபிவிருத்தியுடன் கூடிய மாவட்டமாக மாற்றுதல்.
- பௌத்த தேரர்களின் அறிவுரைகளின் பிரகாரம் ஒவ்வொரு மத நிகழ்ச்சியினையும் உரியவாறு ஏற்பாடு செய்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள் :

- மாவட்டத்தின் 12 பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் 15 சாசனப் பாதுகாப்பு சபைகளை ஒருங்கிணைத்தல்.
- மாவட்டத்தின் அனைத்து விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு உதவி வழங்கும் பணிகளை மேற்கொள்ளல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவித்தல் மற்றும் தகவல்களை இற்றைப்படுத்தல்.
- மாவட்ட சாசனப் பாதுகாப்பு சபை கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல்.
- பௌத்த தேரர்களின் கோரிக்கைகளை ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்புதல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
- வருடாந்த அறநெறி பாடசாலை ஆசிரியர் மற்றும் மாணவர் தகவல்களை இற்றைப்படுத்தல்.
- வருடாந்த அறநெறிப் பாடசாலை மாணவர் தேர்ச்சி மாவட்ட போட்டிகளை நடாத்துதல் மற்றும் அகில இலங்கை போட்டியை ஒருங்கிணைத்தல்.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் வருடாந்த முன்னேற்றத்தை சமர்ப்பித்தல்.

- புண்ணிய கிராம, தஹம் சரசவி, பாளி மொழி மேம்பாடு போன்ற விசேட மாவட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- அறநெறிப் பாடசாலை நூல்களை பகிர்ந்தளித்தல்.
- மாவட்டத்தில் நடாத்தப்படும் பெரஹரா நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- பிரதேச மட்டத்தில் நடைபெறும் அறநெறிப் பாடசாலை வைபவங்கள் போன்றவற்றுக்கு உதவுதல்.
- வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர், அநகாரிக்க தர்மபால போன்ற மாவட்ட நினைவு தினங்களை ஏற்பாடு செய்தல்.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சாத்தியக்கூற்று ஆய்வு அறிக்கைகளை தயாரித்தல்.
- அலுவலக வளாகத்தில் வெசாக் பொசன் போன்ற விசேட தினங்களை முன்னிட்டு மத நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.

22. விவசாய பிரிவு

தொலைநோக்கு : உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய சௌபாக்கியத்துக்காக செயற்திறனுடையதும் உற்பத்தித்திறன் வாய்ந்ததும் பலமானதுமான ஒரு விவசாய பிரிவு

செயயற்பணி: இயற்கை வளங்களின் நிலையான முகாமைத்துவத்தினூடாக சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வர்த்தகம் சார்ந்த பூகோள போட்டித் தன்மை வாய்ந்த உற்பத்தியை உருவாக்கும் ஒரு தொழில் முயற்சியாண்மை விவசாயத்தை அடைதல்.

நோக்கம் மற்றும் குறிக்கோள்:

- உணவு சார்ந்த விவசாயப் பயிர்கள் விடயத்தில் கொள்கை ரீதியான உதவியினை வழங்குதல்.
- உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- விவசாய உற்பத்திகளுக்கு நிலையான விலையினைப் பேணிச் செல்லல்
- கருத்திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தல்.
- தெரிவுசெய்யப்பட்ட பயிர்களின் உற்பத்தியை உயர்த்துதல்.
- துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்திறனுடனும் உற்பத்தி திறனுடனும் நடைமுறைப்படுத்தல்.
- வெளிநாட்டு நிதியங்களை செயற்திறனுடனும் உற்பத்தி திறனுடனும் ஈடுபடுத்துதல்.
- சேவை பெறுநர்களுக்கு நட்புறவானதும் விளைவுகளை நோக்கமாக கொண்டதுமான ஒரு நிர்வாக முறையை நடைமுறைப்படுத்தல்.
- ஒட்டுமொத்த அரச சேவையில் பயனுள்ள ஒரு முகாமைத்துவத்தை ஏற்படுத்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள் :

- விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
- விவசாய தொழில்நுட்ப தகவல்கள்களை விவசாயிகளுக்கு வழங்கும் செயன்முறை தொடர்பாக ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- விவசாய சமூகம் எதிர்கொள்ளும் பயிர்ச்செய்கைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மாவட்ட விவசாயக் குழுவினை நடாத்துதல் மற்றும் அது தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.
- மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து உறம் தொடர்பான கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.
- உர விற்பனையாளர்களையும் உற்பத்தியாளர்களையும் பதிவுசெய்தல் மற்றும் உறம் தொடர்பான முறைகேடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மாவட்டத்தின் விவசாய தகவல்களைச் சேகரித்தல், அறிக்கையிடல் மற்றும் மீளாய்வு செய்தல்..

1.5.2 ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களின் பணியாட்டொகுதி பற்றிய விபரம் 2023.12.31 இல்

பதவி	மாவட்ட செயலகம் ஹம்பாந்தோட்டை		பிரதேச செயலகம் ஹம்பாந்தோட்டை		பிரதேச செயலகம் தங்காலை		பிரதேச செயலகம் வீரகெட்டிய		பிரதேச செயலகம் கட்டுவன		பிரதேச செயலகம் பெலிஅத்த		பிரதேச செயலகம் லுணுகம்வெஹெர		பிரதேச செயலகம் ஓகேவெல		பிரதேச செயலகம் வலஸ்முல்ல		பிரதேச செயலகம் அம்பலாந்தோட்டை		பிரதேச செயலகம் திஸ்ஸமகாராம		பிரதேச செயலகம் அங்குனகொலபெலெஸ்ஸ		பிரதேச செயலகம் சூரியவெவ		மொத்தம்	
	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	தற்போதுள்ள பணியாட்டொகுதி
சிரேஷ்ட நிலை																												
மாவட்ட செயலாளர்	1	1																									1	1
மேலதிக மாவட்ட செயலாளர்	2	1																									2	1
பணிப்பாளர் (திட்டமிடல்)	1	1																									1	1
பிரதம கணக்காளர்	1	0																									1	0
பிரதம உள்ளக கணக்காய்வாளர்	1	1																									1	1
பிரதேச செயலாளர்			1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	0	1	1	1	1	12	11
உதவி மாவட்ட செயலாளர்	1	1																									1	1
உதவி பிரதேச செயலாளர்			1	1	2	1	1	1	1	1	1	1	1	1	1	0	1	2	1	0	1	1	1	1	1	1	13	11
உதவிப் / பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)	4	5	1	0	1	1	1	1	1	0	1	1	1	0	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	16	14
கணக்காளர்	1	1	1	1	1	0	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	0	1	1	1	1	1	1	13	11
பொறியியலாளர்	2	1																									2	1
சிரேஷ்ட நிலை மொத்தம்	**14**	**12**	**4**	**3**	**5**	**3**	**4**	**4**	**4**	**3**	**4**	**4**	**4**	**3**	**4**	**3**	**4**	**5**	**4**	**2**	**4**	**3**	**4**	**4**	**4**	**4**	**63**	**53**
மூன்றாம் நிலை																												
நிர்வாக உத்தியோகத்தர்	1	1	1	0	1	1	1	0	1	0	1	1	1	1	1	1	1	0	1	1	1	0	1	1	1	0	13	7
நிர்வாக கிராம அலுவலர்			1	0	1	0	1	0	1	1	1	0	1	0	1	1	1	1	1	0	1	0	1	1	1	1	12	5
மொழிபெயர்ப்பாளர்	2	1																									2	1
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	1	0																									1	0


மூன்றாம் நிலை மொத்தம்	**4**	**2**	**2**	**0**	**2**	**1**	**2**	**0**	**2**	**1**	**2**	**1**	**2**	**1**	**2**	**2**	**2**	**1**	**2**	**1**	**2**	**0**	**2**	**2**	**2**	**1**	**28**	**13**
இரண்டாம் நிலை																												
அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்	1	0	0	1	1	1	1	0	1	0	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	0	12	9
வரவு செலவு உதவியாளர்	1	0																									1	0
அபிவிருத்தி உத்தியோகத்தர்	35	62	10	21	10	31	10	38	10	22	10	25	8	21	10	19	10	36	10	21	9	20	9	22	9	19	150	357
அபிவிருத்தி உத்தியோகத்தர் (அபிவிருத்தி)	14	9	35	40	77	76	65	67	61	68	76	83	41	43	32	33	58	67	60	64	49	46	56	59	26	31	650	686
திட்டவரைஞர்	1	1																									1	1
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	33	22	28	25	28	30	26	25	28	27	28	28	21	16	22	22	23	23	26	26	26	24	22	22	22	19	333	309
கிராம அலுவலர்			30	23	72	62	60	55	56	42	71	61	36	27	27	25	53	43	55	44	44	36	51	28	21	15	576	461
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்	2	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	0	1	1	1	1	1	1	1	1	1	0	1	0	14	10
கணனி தரவு இயக்குணர்											1	1															1	1
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	2	1	2	0	2	1	2	1	2	1	2	1	2	0	2	1	2	0	2	0	2	0	2	1	2	0	26	7
தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்	2	1	1	0	1	1	1	1			1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	13	11
வரவேற்பு அலுவலர்																					1	0					1	0
இரண்டாம் நிலை மொத்தம்	**91**	**97**	**107**	**111**	**192**	**203**	**166**	**188**	**159**	**161**	**191**	**202**	**111**	**109**	**96**	**103**	**149**	**172**	**156**	**158**	**134**	**129**	**143**	**134**	**83**	**85**	**1778**	**1852**
ஆரம்ப நிலை																												
சாரதி	10	9	2	2	2	2	2	2	2	2	2	1	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	2	34	32
மின்சார தொழில்நுட்பவியலாளர்	1	0																									1	0
வங்களா சமையற்காரர்	1	0																									1	0
அலுவலக உதவியாளர்	14	14	6	6	6	5	6	6	5	5	6	6	5	5	5	5	5	5	6	6	5	5	5	5	4	3	78	76
தொழிலாளர்							1	0																			1	0
ஆரம்ப நிலை மொத்தம்	**26**	**23**	**8**	**8**	**8**	**7**	**9**	**8**	**7**	**7**	**8**	**7**	**7**	**7**	**7**	**7**	**7**	**7**	**8**	**8**	**7**	**7**	**7**	**7**	**6**	**5**	**115**	**108**
Grand Total	**135**	**134**	**121**	**122**	**207**	**214**	**181**	**200**	**172**	**172**	**205**	**214**	**124**	**120**	**109**	**115**	**162**	**185**	**170**	**169**	**147**	**139**	**156**	**147**	**95**	**95**	**1,984**	**2,026**

1.5.3 பிரதேச செயலகங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள்

12 பிரதேச செயலகங்கள்

01. கட்டுவன பிரதேச செயலகம்
02. வலஸமுல்ல பிரதேச செயலகம் වලස්මුල්ල ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය
03. வீரகெட்டிய பிரதேச செயலகம்
04. ஓகேவெல பிரதேச செயலகம்
05. பெலிஅத்த பிரதேச செயலகம்
06. தங்காலை பிரதேச செயலகம்
07. அங்குனகொலபெலஸ்ஸ பிரதேச செயலகம்
08. அம்பலாந்தோட்டை பிரதேச செயலகம்
09. ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகம்
10. சூரியவெவ பிரதேச செயலகம்
11. திஸ்ஸமகாராம பிரதேச செயலகம்
12. லுனுகம்வெஹெர பிரதேச செயலகம்

தொடர் இல.	பிரதேச செயலாளர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு	மொத்த நிலப் பரப்பு (ச.கி.மீ)	சனத்தொகை (2023)	சனத்தொகை அடர்த்தி (1 கி.மீற்றருக்கு)
1	கட்டுவன	56	108	53,093	492
2	வலஸ்முல்ல	53	103	47,987	466
3	வீரகெட்டிய	60	114	47,183	414
4	ஓகேவெல	27	44	21,588	491
5	பெலிஅத்த	71	105	63,559	605
6	தங்காலை	72	149	82,306	552
7	அங்குனகொலபெலெஸ்ஸ	51	171	54,829	321
8	அம்பலாந்தோட்டை	55	212	82,801	391
9	ஹம்பாந்தோட்டை	30	349	65,003	186
10	சூரியவெவ	21	192	48,927	255
11	திஸ்ஸமகாராம	44	773	77,878	101
12	லுனுகம்வெஹெர	36	289	35,824	124
மாவட்டம்		**576**	**2609**	**680,978**	**261**


சனத்தொகை அடர்த்தி (1 சதுர கிலோ மீற்றருக்கு)
700
600
500
400
300
200
100
0
492
466
414
491
605
552
321
391
186
255
101
124
261
கட்டுவன்
வலஸ்முல்ல
வீரகெட்டிய
ஓகேவெல
பெலிஅத்த
தங்காலை
அங்குனகொலபெலெ...
அம்பலாந்தோட்டை
ஹம்பாந்தோட்டை
சூரியவெவ
திஸ்ஸமகாராம
லுணுகம்வெஹெர
மாவட்டம்

அத்தியாயம் 2

2.1 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 12 பிரதேச செயலகங்கள் மூலம் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்

i. நியதிச்சட்ட ரீதியான பணிகள்

- ❖ பிறப்பு/ விவாகம்/ இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட தனிநபர் அடையாளம் தொடர்பான பணிகள்
- ❖ தேசிய அடையாள அட்டை வழங்குதல் மற்றும் பிரதி ஒப்பமிடல்
- ❖ சகல விதமான அனுமதிப் பத்திர வகைகள் வழங்குதல், காணி கையேற்றல் மற்றும் காணி பாராதீனப்படுத்தும் பணிகள்
- ❖ ஓய்வதியம் வழங்குதல் தொடர்பான பணிகள்

ii. சமூக நலன்புரி நடவடிக்கைகள்

- ❖ வெள்ளம் உள்ளிட்ட அனர்த்த நிவாரணப் பணிகள்
- ❖ முதியோர், அங்கவீமுற்ற, கர்ப்பிணி மற்றும் நோய் உதவி போன்ற தனிநபர் உதவிகள் வழங்குதல்

iii. அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் போன்ற நிதி மூலங்களில் ஒதுக்கீடுகளின் கீழ் பொது மலசலகூடம், கிராமிய வீதிகள், கால்வாய்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

iv. பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களை இணைத்து குறைந்த வருமானம் பெறுபவர்களை கட்டியெழுப்புதுல் மற்றும் தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2.2. பிரதேச செயலகங்களின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம்

12 பிரதேச செயலகங்களும் 100% சதவீத முன்னேற்றம் கண்டுள்ளது.

2.3 பிரதேச செயலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சாதனைகள்

தொ. இல.	பிரதேச செயலகம்	விசேட சாதனைகள்
01	கட்டுவன	1. 2022 ஆம் ஆண்டு 13.5% சதவீதமாக இருந்த ஐயக்கடனை 2023 ஆம் ஆண்டு 6% சதவீதமாக குறைக்க முடிந்தமை 2. 2022 ஆம் ஆண்டு கடன் வழங்குதல் 20 மி.ரூபாவாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு 75 மி.ரூபாவாக அதிகரிக்க முடிந்தமை 3. 2022 ஆம் ஆண்டு வரை கடன் அறவீடு மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்த போதும் 2023 ஆம் ஆண்டு அறவிடும் சதவீதத்தை 85% சதவீதமாக அதிகரிக்க முடிந்தமை 4. 20 ஆண்டுகளுக்கு பின்னர் சமுர்த்தி பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் பங்கிலாபம் வழங்கப்பட்டுள்ளது. 5. சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் இலாபம் 2023 ஆம் ஆண்டு ஏனைய ஆண்டுகளை விட கூடுதல் இலாபம் ஈட்ட முடிந்தமை. ➢ மெதகந்த - 18,383,291.74 ➢ வெல்பிட்டிய - 18,394,503.16 ➢ கட்டுவன - 18,880,463.63 ➢ மித்தெனிய - 13,059,250.65 ➢ மகாசங்கம் - 16,643,151.68 6. நிலுவை வரி வருமானத்தை அறவிடல் கடந்த ஆண்டை விட அதிகரிக்க முடிந்தமை. 7. தென் மாகாண அரச சேவை விளையாட்டுப் போட்டித் தொடரில் எல்லே வெற்றிக்கிண்ணம், கிரிக்கட் (ஆண்) இரண்டாம் இடம் மற்றும் மெய்வல்லுநர் லிளையாட்டு 100 மீற்றர், 200 மீற்றர் ஆகியவற்றில் முதலாம் இடத்தைப் பெறல்.

02	வலஸ்முல்ல 	1. 2023 வருடாந்த வருமான சேகரிப்பு இலக்கு 738579.00 ரூபாய் என்பதுடன் அந்த ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தை 1321906.00 ரூபாய் வரை அதிகரிக்க முடிந்தமை. 2. DRY EXPO எனும் பெயரில் உணவு பதப்படுத்தும் (நீல கட்டரொலு, ரொசெல்லா, கெட்டபிச்ச, நீல மானெல்) நிலையம் ஒன்றை ஓமாரே மேற்கு கிராம அலுவலர் பிரிவில் தாபித்து அதன் உற்பத்திகளை PASANKA (PVT) LTD நிறுவனம் மூலம் இணைத்து ஏற்றுமதிக்கு முற்படுத்துவதன் ஊடாக பிரிவில் வாழும் பல குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தமை. குழு உறுப்பினர்கள் பத்து பெருக்காக பாதுகாப்பான வீடு அமைத்தல் மற்றும் பாதுகாப்பற்ற மண்மேடுகளை வெட்டுதல் போன்ற அனர்த்த பிரச்சினைகள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை சித்தம்கல்ல புராதன ரஜமகா விகாரையில் நடாத்துதல்.
03	வீரகெட்டிய	1. ஆசிய விளையாட்டு விழாவில் 400 m தங்கப்பதக்கம் பிரிவின் நதீஷா ராமநாயக்கவால் வெற்றி கொள்ளப்படல். 2. 47 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் 400m, 200m, 100m இப்பிரவின் விளையாட்டு வீரர்களால் வெற்றி கொள்ளப்பட்டது. ➢ இப்பிரிவின் திரு சிரிசேன அரசகரும மொழிகள் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக்கொண்டார். ➢ ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுள் மூன்றாமிடம் பிரிவைச் சேர்ந்த திருமதி கே பீ எல் மதுஷாவினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. 3. 2023 ஆம் ஆண்டின் வரி வருமானம் இலக்கை விட அதிகமாக காணப்படல் ➢ சமுர்த்தி உத்தம பூஜா சமூக தலைவர் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறந்த பிரதேச அமைப்பு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரகெட்டிய பிரதேச சபை பெற்றுக் கொண்டுள்ளது. ➢ சமூர்த்தி சமூக அடிப்படையான அமைப்பு மூன்றாம் இடத்தை பெற்றுக்கொள்ளல். ➢ சமூக அடிப்படைலான அமைப்பு மூன்றாம் இடத்தை பெற்றுக் கொள்ளல்.
04	ஓகேவெல 	1. தென்மாகாண அரச சேவைகள் விளையாட்டு போட்டியில் 400m/800m (ஆண்) முதலாம் இரண்டாம் இடம், ஈட்டி எறிதல் (பெண்) மூன்றாம் இடம், மேசைபடபந்து (பெண/ ஆண் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொள்ளல்.
05	பெலிஅத்த	1. **I.** இலக்கிய விருது (மாவட்ட போட்டியில்) பாடல் இயற்றல் திறந்த போட்டியில் முதலாம் இடம், கட்டுரை திறந்த போட்டியில் முதலாம் இடம், பாடல் இயற்றுதல் சிரேஸ்ட போட்டியில் இரண்டாம் இடம், கவிதை பாடுதல் சிரேஷ்ட பிரிவின் இரண்டாம் இடம், இலக்கிய விவாதம் சிரேஷ்ட போட்டியின் மூன்றாம் இடம், குறுங்கதை திறந்த போட்டியில் மூன்றாம் இடம், கவிதை இயற்றுதல் திறந்த போட்டியில் மூன்றாம் இடம் ஆகியன இப்பிரிவுக்கு கிடைக்கப்பெறல்.

		2. தேசிய மகா விளையாட்டுப் போட்டியில் தென்மாகாண போட்டித் தொடரில் சுத்தியல் எறிதல் போட்டியில் மூன்றாம் இடம் மற்றும் குத்துச்சண்டைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளல். 3. சமூர்த்தி பிரிவில் மாவட்டத்தின் பிரதேச அமைப்புகளுள் முதலாம் இடம், சமுதாயம் சார் அமைப்புக்களில் முதலாம் இடம் (பள்ளத்தர கிழக்குப் பிரிவு) முதலாம் இடம் பெற்றுக்கொள்ளல். 4. உற்பத்தி திறன் போட்டி வெற்றிகளில் கலகம சமூர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொள்ளல். பதிவாளர் பிரிவில் சேவை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்த அவுஸ்திரேலியாவில் கடமை புரியும் வைத்தியர் ஒருவர், இப்பிரிவின் மூலம் மிகவும் செயற்திறனுடன் மேற்கொண்ட பணிக்காக இப்பிரிவின் ஊடாக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மிகவும் றுமை நிலையில் உள்ள 21 குடும்பங்களுக்காக 5000/- பெறுமதியான பொருட்கள் மற்றும் குடும்பங்களின் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி நிறைவு செய்யப்படும் வரை மாதம் ஒன்றுக்கு 5000/- வீதம் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. விதாதா பிரிவு அரச ஒதுக்கீடுகள் இன்றி துணி துவைக்கும் சவர்க்கார உற்பத்தி தொடர்பான செயலமர்வு – 20, ஊதுபத்தி உற்பத்தி செயலமர்வு – 11, பாத்திரங்கள் கழுவும் சவர்க்கார உற்பத்தி செயலமர்வு – 8, பப்படம் உற்பத்தி செயலமர்வு – 9, மெழுகுவர்த்தி உற்பத்தி செயலமர்வு – 3, தொழில்முயற்சி அபிவிருத்தி செயலமர்வு - 2 ஆகியவற்றை நடத்துவதன் மூலம் பிரிவிலுள்ள தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சுயதொழிலில் ஈடுபடுவோரை பலப்படுத்துதல்.
06	தங்காலை 	➢ 2023 ஆம் ஆண்டு அனைத்து வரி வருமான சாதனைகளும் இலக்கு வைக்கப்பட்ட வரி வருமானத்தை பெற்றுக் கொள்ளல்.
07	அங்குனகொலபெலெஸ்ஸ	மாவட்ட இலக்கிய விழாவில், ➢ சிறுவர் கதை எழுதுதல் (முதலாம் இடம்) ➢ கிராமியக் கதைகளை முன் வைத்தல் ((முதலாம் இடம்) ➢ கவிதை பாடுதல் (இரண்டாம் இடம்) ➢ கவிதை இயற்றுதல் (மூன்றாம் இடம்) ஆகியவற்றை பெற்றுக்கொள்ளல். 1. 2023 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழா ➢ எல்லே பெண்கள் – மூன்றாம் இடம் (தேசிய விளையாட்டு – பொலனறுவை) ➢ தென் மாகாண எல்லே ஆண்/ பெண் – முதலாம் இடம் ➢ மாவட்டம் எல்லே ஆண்/ பெண் – முதலாம் இடம் ➢ கபடி தேசிய விளையாட்டு விழா – மூன்றாம் இடம் (பெண்) மூன்று வீராங்கணைகள் காலி குழுவில் இணைந்து விளையாடுதல். ➢ தேசிய விளையாட்டு விழா யூடோ 60 கி.கி எடை – மூன்றாம் இடம் (ஆண்)

		➢ தென் மாகாண யூடோ 78 கி.கி.எடைக்கு மேல் – இரண்டாம் இடம் (பெண்) ➢ தென் மாகாண யூடோ 60 கி.கி.எடை – முதலாம் இடம் (பெண்) ➢ தென் மாகாண விளையாட்டு விழா கோளுன்றிப் பாய்தல் – இரண்டாம் இடம் (ஆண்) ➢ தென் மாகாண பாடசாலை எல்லே பெண்கள் – இரண்டாம் இடம் (ஒதுக்கு குழு தலாவ பாடசாலை) ➢ ரூபவாஹினி கிண்ணம் மாவட்ட கரப்பந்தாட்டம் ஆண்கள் – இரண்டாம் இடம் ➢ சர்வதேச நாற்கோண த்ரோபோல் ஆண் – பெண்கள் குழுக்கள் இரண்டுக்கும் அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவின் வீரர் வீராங்கணைகள் பங்கேற்று வெற்றியீட்டுதல். (பங்களாதேஷில் நடைபெற்ற) ➢ தென்மாகாண அரச சேவை எல்லே பெண்கள் - முதலாம் இடம் அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவு குழு வெற்றியீட்டல். **2.** காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ➢ அளிப்பு பத்திரங்களை தயார் செய்தல் - ▪ இலக்கு - 100 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - 121 ➢ கொள்வனவு விலை அறவிட்ட பின்னர் கொள்வனவு விலை அனுமதிப் பத்திரம் வழங்குதல் ▪ இலக்கு - 06 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - 16 ➢ தவணை அடிப்படையில் கொள்வனவு விலை அறவிடப்படும் துண்டுகளில் இருந்து தவணைக் கட்டணம் அறவிடல் ▪ இலக்கு - 20 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - 41 ➢ அளிப்பு பத்திரங்களில் பின் உரித்தை பெயரிடல் ▪ இலக்கு - 50 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - 58 **3. 2023** ஆம் ஆண்டு அரச காணி வரி வருமானம் சேகரிப்பு. நீண்டகால வரி சேகரித்தல் ▪ இலக்கு - 05 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - 05 ➢ 2023 ஆண்டுக்கான வரி வருமானம் ▪ இலக்கு - රු.1,916,333.00 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - රු. 4,458,412.50 ➢ முன்னைய ஆண்டுகளில் அறவிட்ட மொத்த நிலுவை வரி ▪ இலக்கு - රු.206,848.00 ▪ நிறைவேற்றப்பட்ட அளவு - රු.206,848.00 **காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ்,** ➢ அளிப்பு பத்திரங்களை தயார் செய்தல் 121 ➢ இலவசமாக அனுமதிப பத்திரம் வழங்குதல் 95 ➢ கொள்வனவு விலை அறவிட்ட பின்னர் கொ.வி. அனுமதிப் பத்திரம் வழங்குதல் 16 ➢ தவணை அடிப்படையில் கொள்வனவு விலை அறவிடப்படும் துண்டுகளில் இருந்து தவணைக் கட்டணம் அறவிடல் 41 ➢ அளிப்பு பத்திரங்களில் பின் உரித்தை பெயரிடல் 58 ➢ அனுமதிப் பத்திரங்களில் பின் உரித்தை பெயரிடல் 46 **நீண்டகால வரிகளை தயாரித்தல்** ➢ வதிவிடம் 1 ➢ விவசாயம் 3

		அரச நிறுவனங்களுக்கு காணி கையளித்தல் ➢ திணைக்களங்களுக்கு கையளித்தல் 2 ➢ உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளித்தல் 4 **உடைமைய மீளப்பெறல்** ➢ அனுமதியற்ற காணி பிடிப்புக்கள் எண்ணிக்கை 4 ➢ அகற்றும் கட்டளை அறிவிப்பு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை அரச காணி வரி வருமான சேகரிப்பு 4 **2023 ஆம் ஆண்டுக்கான வரி வருமானம் (ரூ)** ➢ வருடாந்த வரித் தொகை 53,741.00 ➢ வருடாந்த வரி தண்டப்பணம் 5,169.50 ➢ பயன்பாட்டு வரித் தொகை 231,058.00 ➢ பயன்பாட்டு வரி தண்டப்பணம் 5,048.00 ➢ நீண்டகால வரி 8,506.00 ➢ கொள்வனவு விலை அறவிடல் 1,824,091.00 ➢ கொள்வனவு விலை தண்டப்பணம் 152,842.00 ➢ நடுத்தர வகுப்பு மதிப்பீட்டுத் தொகை 521,650.00 ➢ ஏனையவை (அனுமதிப்பத்திரம்) 1,656,307.00 **முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை வரி அறவீடு (ரூ.)** ➢ நிலுவை கொள்வனவு விலை 184,000.00 ➢ நிலுவை கொள்வனவு விலை வட்டி 22,848.00 **முதியோர் அபிவிருத்தி பணிகள்** ➢ ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை – சனவரி 18, தலாவ விகாரை ➢ முதியோர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளும் நடமாடும் சேவை – சனவரி 30, வக்கமுல்ல முதியோர் சங்கம் ➢ முதியோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி – பெப்ரவரி 08, மெத ஆர சனசமூக நிலையம் ➢ முதியோர் சங்க சீல இயக்கம் – பெப்ரவரி 20, தபரெல்ல முதியோர் சங்கம் ➢ முதியோர் சங்க தானம் வழங்குதல் – மார்ச் 25, கங்கானம்கம சனசமூக நிலையம்
08	அம்பலாந்தோட்டை	1. ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லே இரண்டாம் இடம், கரப்பந்தாட்டம் ஆண் முதலாமிடம், கரப்பந்தாட்டம் பெண்கள் முதலாமிடம், தென் மாகாண மெய்வல்லுநர் விளையாட்டு இரண்டாமிடம், தேசிய விளையாட்டு விழா எல்லே பெண்கள் மூன்றாமிடம். 2. ஆண்டின் இலக்கிய போட்டிக்காக ஆக்கங்களை முன்வைத்தமையால் விருது பெறல் (மாகாண சபை நன்னடத்தை அலுவலர் – திருமதி நிர்மலா விக்ரம களுதொட்ட) 3. கிராம அபிவிருத்தி அமைச்சால் மேற்கொள்ளப்படும் சங்கங்களை தரப்படுத்தலின் போது அம்பலாந்தோட்டை கிராம அபிவிருத்தி சங்கம் B தர சங்கமாக விருது பெறல் 4. ரூ. 750,000.00 பெறுமதியான 03 வீடுகள் மற்றும் ரூ. 250,000.00 பெறுமதியான 03 வீடுகளை பயனாளர் குடும்பங்களுக்காக நிர்மாணித்தல். 5. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சிறமதான நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த முடிந்தமை.

		6. விதாதா பிரிவு மூலம் உற்பத்தியை இலக்காக கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்துவதன் ஊடாக பிரிவில் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்க முடிந்தமை.
09	ஹம்பாந்தோட்டை	**1.** 2023 ஆம் ஆண்டு சமுர்த்தி வங்கி பெற்ற தேறிய இலாபத்தை உயர்வான பெறுமதிக்கு கொண்டுவர முடிந்தமை
10	சூரியவெவ	1. ➢ 2023 ஆம் ஆண்டுக்கான வரித் தொகை நிலுவை இல்லாமல் அறவிடல் ➢ தென் மாகாண சபை மகளிர் அலுவல்கள் அமைச்ச்சினால் நடாத்தப்பட்ட அனகுக்கலை நிகழ்ச்சியில் முதலாமிடம். ➢ ஏற்றுமதியை நோக்கமாக கொண்ட கைப்பணி உற்பத்தி போட்டியியல் திரு எரந்த சந்திமால் இறுதி 100 பேரில் உள்ளடங்குதல் ➢ தேசிய மகா விளையாட்டுப் போட்டியியல் 800மீ முதலாமிடம், 1500மீ முதலாமிடம், 400x4 தங்கப்பதக்கம் ஆகியவற்றை இப்பிரிவின் வீ ர்கள் வெற்றியீட்டுதல்
11	திஸ்ஸமகாராம	1. ➢ தென் மாகாண இலக்கியப் போட்டி 2023 – கவிதை உருவாக்கம் (திறந்த) இரண்டாமிடம் மற்றும் பத்திஎழுத்து (திறந்த) இரண்மிடம் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளல். ➢ கெக்குலு சிறுவர் கழக இலக்கிய போட்டியில் தேசிய மட்ட வெற்றிகள் 02 ஐப் பெற்றுக்கொள்ளல். ➢ உற்பத்தி திறன் போட்டியில் விசேட திறமை விருது பெறல். ➢ நடத்தல் - National Championship இரண்டாமிடம் மற்றும் தேசிய மகா விளையாட்டு விழா மூன்றாமிடம் பெறல். ➢ கெக்குலு சிறுவர் கழக இலக்கிய போட்டியில் வலய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நடாத்துதல் 02 தேசிய மட்ட சாதனைகள் ➢ உற்பத்தி திறன் போட்டியில் விசேட திறமை விருது ➢ நடைப் போட்டி - National Championship இரண்டாமிடம் ➢ நடைப் போட்டி – தேசிய மகா விளையாட்டுப் போட்டி மூன்றாமிடம்
12	லுனுகம்வெஹெர	1. சர்வதேச புகைபிடித்தலுக்கு எதிரான தினத்துடன் இணைந்ததாக நிதி சேகரிக்கும் போது ரணவரனாவ கிராம அலுவலர் பிரிவு – மாவட்டத்தின் முதலாமிடத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தெவ்ரம்வெஹெர சமுர்த்தி வங்கி இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொள்ளல். 2. 47 ஆவது துசிய விளையாட்டு விழாவுடன் இணைந்ததாக நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியியல் மாகாண பெண்கள்கிரிக்கெட் இரண்டாமிடத்தை வெற்றி கொள்ளல். 3. ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்கள் எல்லே போட்டியில் இரண்டாமிடத்தை வெற்றி கொள்ளல். 4. ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்கள் கிரிக்கெட் போட்டியில் இரண்டாமிடத்தை வெற்றி கொள்ளல் 5. அகில இலங்கை கிராம அலுவலர் அலுவலக பரிசோதனையின் கீழ் போகஹ வெவ கிராம அலுவலர் அலுவலகம் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொள்ளல்.

		6. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மிகத் திறமை மற்றும் செயலூக்கமான மனித வள அபிவிருத்தி அலுவலராக இந்த அலுவலகத்தின் மனித வள அலுவலர் திருமதி கே.கே.நதீஷா ஸ்ரீமாலி தெரிவு செய்யப்படல். 7. 8. "தேசிய தொழில் வழிகாட்டல் வாரத்துடன்" இணைந்ததாக நடைபெற்ற போட்டியில் செயலூக்கமான மனித வள பங்கேற்பு பிரிவு சார்பில் அகில இலங்கை ஐந்தாம் இடம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக்கொள்ளல்.

2.4 பிரதேச செயலகங்கள் முகம் கொடுக்க நேரிடும் சவால்கள்

தொ. இல.	பிரதேச செயலகம்	சவால்கள்
01	கட்டுவன	➢ பராமரிப்பு செலவு, எழுதுகருவி செலவு மற்றும் சேவைப் பிரிவுக்கான ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக பணிகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடல். ➢ தொழிநுட்பமயப்படுத்தலுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை அப்விருத்தி செய்தல் மற்றும் அதற்குத் தேவையான இயந்தர சாதனங்களை வழங்குவதற்குப் போதியளவு வளங்கள் இல்லாமை. ➢ கணணி உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை
02	வலஸ்முல்ல	➢ உடல் ரீதியாக குறைபாடுள்ள சேவை பெறுநர்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேல்மாடிகளுக்கு செல்லும் போது ஏற்படும் அசௌகரியங்கள். ➢ பௌதீக வளங்களில் நிலவும் பற்றாக்குறை (கணணி, அச்சு இயந்திரம், மேசை, கதிரை) மற்றும் அலுவலக இடவசதி பற்றாக்குறை
03	வீரகெட்டிய	➢ உத்தியோகத்தர்களுக்கு போதியளவு மேசை, கதிரை, கணணி போன்ற உபகரணங்கள் போதியளவு இல்லாமை மற்றும் அலுவலர்கள் மிகை காணப்படல

04	ஓகேவெல	➢ பிரிவின் பூகோள அமைவிடத்தின் பிரகாரம் உருவாகியுள்ள சிக்கல் காரணமாக சேவை பெறுநர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் ➢ அலுவலகம் நகரத்துக்கு அண்மையில் அமையாதமை மற்றும் போக்குவரத்து சிக்கல் காணப்படல்
05	பெலிஅத்த	➢ இணையதள வசதிகளை போதுமான அளவு பெற முடியாமை. ➢ கணணிகள் போதியளவு இல்லாமை. ➢ நவீன தொழிநுட்பத்துக்காக அணுகுவதில் உள்ள சிறமம்
06	தங்காலை	➢ அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு போதுமான அளவு இடவசதிகள் இல்லாமை ➢ அலுவலக உபகரணங்கள் பற்றாக்குறை உதா- கணணி, அச்சு இயந்தரம் போன்றவை
07	அங்குனகொலபெலெஸ்ஸ	**பிரிவு எதிர்நோக்கும் சவால்கள்** ➢ பயிர்ச்செய்கைகளுக்குரிய நீர் வசதி குறைந்த பிரதேசமாக காணப்படல். ➢ வனவிலங்குகளின் பாதிப்பு அதிக் பிரதேசமாக காணப்படல். ➢ விவசாய அறிவு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக தொழிநுட்பம் மிகவும் குறைந்தளவு பயன்படுத்தப்படும் பிரதேசமாக காணப்படல் ➢ கிராமிய பாக்குவரத்து அசௌகரியம் காணப்படல் ➢ அதிக போதைப்பொருள் பாவனை மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் வாழ்கின்றமை. ➢ குறைவான குடிநீர் வசதிகள் கொண்ட பிரதேசமாக காணப்படல் **பிரதேச செயலகத்தில் நிலவும் சவால்கள்** ➢ உரியவாறு ஒழுங்குபடுத்தப்பட்ட போதியளவு இடவசதி இல்லாமை. ➢ கூட்ட மண்டப வசதிகள் இல்லாமை.
08	அம்பலாந்தோட்டை	➢ கணணி, அச்சு இயந்திரம் போன்ற அலுவலக உபகரண பற்றாக்குறை ➢ எழுதுகருவிகள் பற்றாக்குறை ➢ பதவிநிலை அலுவலர்கள் பற்றாக்குறை (இந்த அலுவலகத்தில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக கிராம அலுவலர் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர் ஆகிய பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாக உள்ளதால் அலுவலக பணிகளை முன்னெடுத்தலின் போது பாரிய பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடல்).
09	ஹம்பலாந்தோட்டை	➢ பராமரிப்பு செலவு, எழுதுகருவி செலவு மற்றும் சேவைப் பிரிவுக்கான ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக பணிகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடல். ➢ பௌதீக வளங்களில் நிலவும் பற்றாக்குறை

10	சூரியவெவ	➢ அபிவிருத்தி அலுவலர்களின் மிகை காணப்படல் ➢ முகாமைத்துவ சேவை அலுவலர் பற்றாக்குறை நிலவுதல் ➢ அச்சு இயந்திரம், நிழற்படப் பிரதி இயந்திரம் போன்ற உபகரங்கள் அடிக்கடி பழுதடைதல் காரணமாக அன்றாட **அலுவலக பணிகளை பயனுள்ளவாறு மற்றும் செயற்திறனாக** மேற்கொள்வதில் தடை ஏற்படல். ➢ இடவமேற்குறிப்பிடப்பட்ட தொழிநுட்ப கோளாறுகளை இனம் காண முடியுமான மனித வளம் இல்லாமை. ➢ தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் பதவியில் வெற்றிடம் நிலவுதல். ➢ அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு இடவசதி இல்லாமை. ➢ அலுவலக மேசை கதிரை போன்ற அலுவலக உபகரணங்கள் போதியளவு இல்லாமை. ➢ களஞ்சிய வசதிகள் ஆவணக்காப்பகம் மற்றும் சாப்பாட்டு அறை போன்றவற்றில் நிலவும் இடவசதிகள் பற்றாக்குறை. ➢ அலுவலகத்தின் உத்தியோகத்தர்களது மோட்டார் சைக்கில்களை உரியவாறு நிறுத்தி வைப்பதற்கான இடவசதிகள் இல்லாமை காரணமாக திறந்தவெளியின் கவர்ச்சி குன்றிக் காணப்படல்.
11	திஸ்ஸமகாராம	➢ தேவையான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை. ➢ சமுர்த்தி/ போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு போதியளவு ஒதுக்கீடுகள் இல்லாமை. ➢ மக்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு ஒதுக்கீடுகள் இல்லாமை. ➢ ஆண்டின் இறுதியில் பாரியளவு கருத்திட்டங்கள் கிடைக்கப்பெறல் காரணமாக நடைமுறைப்படுத்துவதில் சிறமங்கள் ஏற்படல். ➢ காட்டு யானைகள் பிரச்சினை மற்றும் யானை மனிதன் மோதல் பெருமளவு இடம்பெறல் ➢ வருடத்தின் கூடுதலான காலத்துக்கு நிலவும் கடும் வெப்பம் காரணமாக பயிர்களுக்கு சேதம் ஏற்படல். ➢ வருடத்தின் கூடுதலான காலத்துக்கு நிலவும் கடும் வெப்பத்துடனான சூழலில் கடமை மேற்கொள்ள நேரிடல் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கான நிதி ஒதுக்கீடு குறைவாக காணப்படல் ➢ அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் இல்லாமை.
12	லுனுகம்வெஹெர	➢ பழைய கட்டிடம் ஒன்றில், மட்டுப்படுத்தப்பட்ட இடத்தில், குறைந்தளவு வசதிகளின் கீழ் பல பிரிவுகளாக பிரக்காது அலுவலகத்தை நடாத்தசி செல்லல். ➢ குறைந்த அளவு துப்பரவேற்பாட்டு வசதிகள் காணப்படல் ➢ கடும் வெப்பமான காலநிலை நிலவும் ஒரு பிரதேசத்தில் அலுவலகம் அமைந்துள்ளமையால் பகற் காலங்களில் நிலவும் கடும் வெப்பத்துக்கு மத்தியில் அலுவலர்களுக்கு கடமை மேற்கொள்ள நேரிடல். ➢ மக்கள் காத்திருப்பதற்கு போதியளவு இடவசதி இல்லாமை மற்றும் அவர்களுக்குரிய வசதிகள் குறையாக காணப்படல். ➢ பிரிவில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களாக உள்ளதுடன், சமுர்த்தி வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ள கடன்களுக்காக தவணைக் கட்டணங்களை மறையாக அறவிடுவதில் சிக்கல் உருவாதல். ➢ முகாமைத்துவ அலுவலர்கள், கிராம அலுவலர் பதவிகளில் வெற்றிடம் நிலவுவதால் நாளாந்த கடமைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்படல்.

2.5 பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள்

தொ. இல.	பிரதேச செயலகம்	இலக்குகள்
01	கட்டுவன	➢ 2024 ஆம் ஆண்டுக்கான பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளல். ➢ 2024 ஆம் ஆண்டுக்கான மாகாண சபை அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தவுள்ள முன்மொழிவுகளை உரிய காலப் பிரிவில் மேற்கொள்ளுதல். ➢ ஏனைய நிரல் அமைச்சுக்களின் கீழ் கிடைக்கப்பெறும் கருத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல். ➢ ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உரியவாறு நடத்துதல் ➢ வள விவரத்தை தயாரித்தல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவை இற்றைப்படுத்தல்.
02	வலஸ்முல்ல	➢ அரச கொள்கைகள் பிரகாரம் மக்கள் பணியினை மேற்கொண்டு மக்களின் வரவேற்பை பெற்ற சிறந்த பிரதேச செயலகமாக மாற்றம் பெறல்.
03	வீரகெட்டிய	➢ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்கள் வாழ்வை மேம்படுத்துவதற்கான அரச கொள்கைகள் பிரகாரம் சேவை வழங்குதல் மற்றும் ஒற்றுமை ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வு மூலம் சுபீட்சமான தன்னிறைவடைந்த சமூகம் ஒன்றை உருவாக்குதல். ➢ தொற்றுநோய்த் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல் ➢ உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல்
04	ஓகேவெல	➢ உற்பத்தி திறன் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளை அடைதல்
05	பெலிஅத்த	➢ பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்களுக்கு சேவை வழங்குவதை மேம்படுத்தல் ➢ நிர்வாக செயற்திறனை அபிவிருத்தி செய்தல் ➢ சமூக அபிவிருத்தி ➢ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்தல் ➢ அனர்த்த முகமைத்துவம் ➢ சூழல் பேன்தகு தன்மை

06	தங்காலை	➢ தாபன விதிக்கோவை, நடைமுறை விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் பிரகாரம் 333 தனிப்பட்ட கோப்புக்களை உரியவாறு பராமரித்தல். ➢ ஏற்புடைய நிறுவனங்களின் பரிந்துரைகள் பிரகாரம் பிரதேச செயலாளர் அனுமதித்த பின்னர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் ➢ அரச அலுவலர்களின் லீவு விண்ணப்ப பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான ஆவணத்தை முறையாக பேணுதல் ➢ சரிமுறையாக ஆவணங்களை தயாரித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்று அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ 260 வியாபாரப் பெயர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் ➢ தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரசைகளுக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல் ➢ காணி அனுமதி பத்திரம் வழங்கப்பட்ட காணிகளுக்கான 100 அளிப்பு பத்திரங்களை தயாரித்தல் ➢ அரச அனுமதி பெறப்படாத காணிகளுக்காக 100 அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ நீண்ட கால வரிகளை தயாரித்தல், வருடாந்த வரி, காணிக் கச்சேரிகளை நடத்துதல் ➢ பிறப்புச் சான்றிதழ் வழங்குதல், இறப்புச் சான்றிதழ் வழங்குதல், விவாக சான்றிதழ் வழங்குதல், பிறப்புச் சான்றிதழ் பதிவு செய்தல், இறப்புச் சான்றிதழ் பதிவு செய்தல் ➢ மதுவரி அனுமதிப் பத்திரம் வழங்குதல் ➢ செயற்திறனுடன் வாகன வருமானச் சான்றிதழ் வழங்குதல் ➢ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உரியவாறு நடத்துதல் ➢ 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள 108 முன்மொழிவுகளை உரிய காலப் பிரிவுக்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் ➢ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை 2024 ஆம் ஆண்டுக்கான கருத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தல் ➢ அனைத்து தகவல்களும் உள்ளடங்கிய வள விவரத்தை தயாரித்தல் ➢ சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை செய்து 2023 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லல் ➢ குறைந்த வருமானம் பெறும் 5 குடும்பங்களுக்கு 50% சதவீத பயனாளிகளின் பங்களிப்புடன் மின்சாரம் வழங்குதல் ➢ வாழ்வாதாரத்தை மேம்படுத்தலின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபார நிலையங்களுக்கு 50% சதவீத பயனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் மின்சாரம் வழங்குதல் ➢ உற்பத்தி துறைகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் கொண்ட 10 பேருக்கு உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதனங்களை 50% பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் வழங்குதல் ➢ வீட்டு உற்பத்திதிறனை பலப்படுத்துவதற்காக 25 குடும்பங்களை இனம் காணுதல் மற்றும் பின்னாய்வு செய்தல் ➢ சமூகப் பாதுகாப்பு நன்மைக்காக பங்களிப்புச் செய்வதை ஊக்கப்படுத்தல் ➢ 100 விற்பனைக் கண்காட்சிகளை நடத்துதல், கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை தொடர்பு படுத்தல்

		➢ வியாபாரத் திட்டமிடலை தயாரித்தல் தொடர்பான 16 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் ➢ பொதியிடல் பற்றி அறிவூட்டும் 16 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ சிறிய அளவு / சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்காக 9 உற்பத்தி திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ S5 எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் நிறுவனங்களுக்கு அறிவூட்டல் மற்றும் S5 சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க வைத்தல் ➢ கல்வி நிறுவனங்களில் உற்பத்தி திறன் மற்றும் நவீனமயப்படுத்தல் பற்றிய ஆரம்ப சான்றிதழ் பாடநெறியை நடத்துதல் ➢ 1180 பாடசாலை தொழில் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் க.பொ.த (சா.த) ➢ 50 சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ 200 தொழில் வழிகாட்டி சேவைகளை வழங்குதல் ➢ பிரதேச விவசாய கூட்டத்தை மாதாந்தம் நடத்துதல் ➢ 2023/24 ஆம் ஆண்டு பெரும்போக நெல் கொள்வனவு செய்தல் ➢ கஹதாவ, வாடிகல ஆகிய பிரிவுகளில் 50 பயனாளிகளுக்கு கன்றுகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பின்னாய்வு செய்தல மாம்பழக் கருத்திட்டம் – 50 கன்றுகள், செகட்டிய, மாதுளை கருத்திட்டம்-500L நீர்த்தாங்கி 01, புல் வெட்டும் இயந்திரம் 01, கொய்யா பழக் கருத்திட்டம் பப்பாசிப் பழக் கருத்திட்டம் காய்கறிகள் கருத்திட்டம் ➢ திறமை மற்றும் ஆற்றல்கள் நிறைந்த சிறுவர் சமுதாயத்தை உருவாக்குதல் ➢ சிறுவர் உரிமை மேம்பாட்டுக்காக பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ சமூக சேவை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தங்காலை பிரதேச செயலகப் பிரிவில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ ஆரம்ப சிறுவர் பராய அபிவிருத்தியின் கீழ் முன்பள்ளிகளுக்கான ஆசிரியர் கொடுப்பனவுகளை வழங்குதல், மதிப்பீடு செய்யும் விழாக்களை நடத்துதல் மற்றும் பாலர் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, தரமான நிலைக்கு கொண்டு வருதல் ➢ பெண்களுக்காக தொழிற் பயிற்சி நிகழ்ச்சித திட்டங்கள் மற்றும் மகளிர் சங்கங்களை தாபித்தல் ➢ கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி சங்கங்களை மறுசீரமைத்தல், தேர்தல் நடத்துதல், சங்கங்களை இயங்கச் செய்தல், வீட்டு உற்பத்தி திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வீட்டு உதவிகள் வழங்குதல் ➢ கரையோர வளங்கள் முகாமைத்துவம் ➢ அஸ்வெசும பயனாளிகளை இனம் காணுதல் மற்றும் நன்மைகளை வழங்குதல் ➢ அறிக்கையிடப்பட்டதன் பிரகாரம் சமுதாயம் சார் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ➢ 25 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

		➢ தங்காலை அதிகார பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் செயற்திறனுள்ள சேவையை வழங்கி சிறந்த பிரதேச செயலகமாக மாற்றமடைதல்
07	அங்குனகொலபெலெஸ்ஸ	➢ 109 பன்முகப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை மேற்கொள்ளல் ➢ இளம் விவசாய தொழில் முயற்சியாண்மை கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜந்துர, வீரகஸ்வெவ, அத்தனயால கிழக்கு / மேற்கு ஆகிய பிரிவுகளுக்கான கருத்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்ளல் ➢ விவசாய நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை மேற்கொள்ளல் ➢ 03 கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களை மேற்கொள்ளல் ➢ 20 சுடுகலன் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் 71 உத்தியோகத்தர் செயலாற்றுகை அறிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அளவீட்டுக்கு சமர்ப்பித்து சம்பளவேற்றங்களை உரிய திகதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ➢ 24 தகவல் கோரிக்கைகளை உரிய திகதியில் சமர்ப்பித்தல் ➢ 100 வியாபார பெயர் சான்றிதழ்களை வழங்குதல் ➢ 525 வருமானச் சான்றிதழ்களை வழங்குதல் ➢ 40 மரப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ 20 மரம் சாய்த்தல் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். ➢ 95 வாகன தண்டப்பணம் அறவிடுதல் ➢ 06 விலங்குகள் போக்குவரத்து அனுமதி பத்திரம் வழங்குதல் ➢ 20 பரீட்சை கட்டணம் அறவிடல் ➢ 40புகையிரத ஆணைச்சீட்டுகளை வழங்குதல் ➢ 06 மர வியாபாரங்களுக்கு பரிந்துரை வழங்குதல் ➢ 16 மது வரி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ செயலாற்றுகை அறிக்கையை மதிப்பீட்டுக்கு, அளவீட்டுக்கு சமர்ப்பித்தல் மற்றும் சம்பளவேற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ➢ செயலாற்றுகை அறிக்கையை மதிப்பீட்டுக்கு சம்பளவேற்றங்களுக்காக 59 பரிந்துரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ➢ செயலாளர் பிரிவு தினக் கூட்ட அறிக்கை தயாரித்து ஒவ்வொரு மாதமும் அதன் பிரதியை மாவட்ட செயலாளருக்கு சமர்ப்பித்தல் ➢ 120 காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ 14 நீண்ட கால வரி அறவிடல் ➢ 05 வருடாந்த வரி அறவிடல். ➢ அரச நிறுவனங்களுக்கு 04 காணிகளை கையளித்தல் ➢ 2000 வருமான அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் ➢ 40 வாகனங்களின் உரிமை மாற்றம் செய்தனை மேற்கொள்ளல் ➢ உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான ரூ.54000.00 கட்டணம் அறவிடுதல் ➢ இடர்க் கடன்களுக்காக ரூ.507000 வட்டி அறவிடுதல் ➢ 2000 அடையாள அட்டைகளை வழங்குதல் ➢ 200 ஆலோசனை செயலமர்வுகளை நடாத்துதல். ➢ 08 பெண்கள் செயற்பாட்டு அமைப்புக்களை மீளமைத்தல் ➢ பெண்களுக்கு அறிவூட்டும் 24 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் ➢ 25 பெண்களுக்கு கடன் வழங்குதல்களை மேற்கொள்ளல் ➢ 05 பெண்கள் சுய தொழில் உதவி வழங்குதல் ➢ 36 பெண்கள் செயற்பாட்டு அமைப்புக்களை நடாத்தத்தல் ➢ சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டும் 50 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்
08	அம்பாலாந்தோட்டை	➢ 02 புதிய தரவுத் தளங்களை ஏற்படுத்துதல் ➢ 03 புதிய விளையாட்டு கழகங்களை தாபித்தல் ➢ பாடசாலை மாணவர்களுக்கான தொழிற்கல்வி பற்றிய விழிப்புணர்வூட்டும் 20 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

		➢ 75 வேலையற்ற இளைஞர் யுவதிகளை தொழிற்பயிற்சிக்கு அனுப்புதல். ➢ சிறிய அல்லது நடுத்தர அளவு 04 தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் ➢ போதைப் பொருளுக்கு அடிமையான 55 நபர்களை மீட்டெடுத்து சமூகமயப்படுத்தல் ➢ 02 கைத்தொழில் அல்லது விவசாய ஏற்றுமதி உற்பத்திக் கருத்திட்டங்களை உருவாக்குதல் ➢ சூழல் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்யும் 05 பயிர்ச் செய்கை கருத்திட்டங்களை உருவாக்குதல் ➢ 100 "உருமய" அளிப்பு பத்திரம் வழங்குதல்
09	ஹம்பாந்தோட்டை	➢ 2024 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட முன்மொழிவுகளை உரிய காலத்தில் நிறைவு செய்தல் ➢ 2024 ஆம் ஆண்டுக்கான மாகாண சபை அபிவிருத்தி திட்டங்களை உரிய காலத்தில் நிறைவு செய்தல் ➢ நிபல் அமைச்சின் கீழ் கிடைக்கப்பெறும் கருத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், பின்னாய்வுப் பணிகளை மேற்கொள்ளல் ➢ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உரியவாறு நடத்துதல் ➢ வள விவரத்தை தயாரித்தல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவை இற்றைப்படுத்தல்
10	சூரியவெவ	➢ பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் வாழ்வை மேம்படுத்துவதற்காக அரச கொள்கைகளுக்கு ஏற்ப சேவைக்கு அர்ப்பணித்தல் மற்றும் ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வு மூலம் சுபீட்சமான தன்னிறைவு பெற்ற சமூகம் ஒன்றை உருவாக்குதல் ➢ அனுமதி பெறப்பாடாத காணிகளுக்காக முறையான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ காணிகளுக்கு 35 அளிப்பு பத்திரங்களை வழங்குதல் ➢ தேசிய அடையாள அட்டை இல்லாத நபர்களுக்காக நடமாடும் சேவைகளை நடாத்தி தேசிய அடையாள அட்டை வழங்குதல் ➢ நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்ததாக பிறப்பு, விவாகம், இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவைகளை நடத்துதல் ➢ எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடல்
11	திஸ்ஸமகாராம	➢ 04 வீடுகளை நிர்மாணித்தல் ➢ சமர்த்தி வலய மட்டத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் புத்தாண்டு சந்தைகளை நடத்துதல் ➢ மகளிர் தின நிகழ்ச்சித் திட்டங்கள நடாத்துதல் ➢ 127 பிள்ளைகளுக்காக ஜப்பான் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ➢ தொழில் முயற்சியாளர்களுக்காக 02 இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ➢ 03 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1039 அஸ்வெசும பயனாளிகளை வலுவூட்டுதல் ➢ தலா ஒரு பிள்ளைக்காக RPL நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் NVQ வழங்குதல் ➢ சமுர்த்தி சிறுவர் கழக போட்டிகளை வலய மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடத்துதல் ➢ கலைஞர்கள் சுவந்தம் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல் ➢ அங்கஹித்த கலைஞர்கள் உதவி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல் ➢ கலை நிறுவன உதவி நிகழ்ச்சித் திட்டத்தை நாத்துதல். ➢ 50% பயனாளிகளின் பங்களிப்பில் மின்சார கோரிக்கைகளை வழங்குதல் ➢ 50% பயனாளி பங்களிப்பின் கீழ் 10 உபகரணக் கோரிக்கைகளை வழங்குதல் ➢ வீதி மின்சார இடங்கள் மூன்றுக்கான மின்சாரத்தை நீடித்தல் ➢ மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல் ➢ 50% பயனாளிகள் பங்களிப்பின் கீழ் 10 நீர் இணைப்புகளை வழங்குதல் ➢ 200 காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் ➢ 200 காணி அளிப்பு பத்திரங்களை வழங்குதல் ➢ 15 காணிக் கச்சேரிகளை நடத்துதல்

		➢ 200 காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்குதல் ➢ பிரதேச செயலாளர் பிரிவு தினம் / 35 நடமாடும் சேவைகளை நடத்துதல்
12	லுனுகம்வெஹெர	➢ அரசுக்கு அறவிடப்பட வேண்டிய வரித்தொகைகள் மற்றும் வருமான அறவீட்டை வெற்றிகரமாக மேற்கொள்ளல் ➢ பிரிவிலிருந்து புதிய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர் குழுக்களை உருவாக்குதல் ➢ பிரிவில் காணப்படும் அரச கட்டிடங்களின் பயன்பாடு தொடர்பில் தரவுத்தளம் ஒன்றை தயாரித்தல் ➢ பிரிவில் காணிகள் அற்ற நபர்களுக்கான காணி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2.6. மாவட்ட செயலகத்தின் முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.6.1 <u>விசேட சாதனைகள்</u>

1. 2022/2023 பெரும்போகத்தின் போது 15,000 மெட்ரிக் டொன் நெல் 1,800 மில்லியன் ரூபாவுக்கு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து சிறிய ஆலை உரிமையாளர்கள் மூலம் இலங்கையின் 7 மாவட்டங்களில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். இதன் போது ஆகக் கூடுதலான நெல் கொள்வனவு செய்த மாவட்டம் ஹம்பாந்தோட்டை என்பதுடன் மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை, கம்பஹா தென்மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி சபரகமுவ மாகணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் அரிசி விநியோகம் வெற்றிகரமாக மேற்கொள்ளல். அதன் மூலம் ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களுக்கு மற்றும் ஆலை உரிமையாளர்களுக்கு விசேட நிவாரணம் கிடைக்கப்பெற்றது.

2. 2022/2023 சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தின் போது அதிகரிக்கப்பட்ட எரிபொருள் மற்றும் இரசாயன உரப் பற்றாக்குறை, விலை அதிகரிப்பு, உடவளவ நீர்த்தேக்கத்தின் நீரின் மட்டம் குறைவடைந்த போதும் விவசாய இலக்குகளை அடைந்து ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களின் வருமான நிலையைப் பாதுகாத்தல்.

3. 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட கடுமையான வரட்சி காரணமாக ஏற்பட்ட குடிநீர் பற்றாக்குறை மற்றும் பயிர்ச் சேதங்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைப் பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றல்.

4. சுமார் 30 ஆண்டுகளுக்கு பின்னர் இறுதி நான்கு மாதங்களில் பதிவாகிய அதிக மழைவீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலைமைகளை முறையாக முகாமை செய்து அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அதன் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

5. 06 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 07 இளம் விவசாய முயற்சியாண்மைக் கிராமங்களுக்காக கமத் தொழில் அமைச்சு 162.38 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடுகள் மற்றும் காலநிலை ஸ்மாட் கருத்திட்டத்தின் மூலம் 132.47 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு கருத்திட்டங்களை ((ஆடுகள் வழங்குதல், உளுந்து பாசிப்பயறு பயிர்ச்செய்கை கருத்திட்டம், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம், விவசாயத் துறையில் இளைஞர்களை

நிறுத்தி வைத்தல் மற்றும் குளங்களை புனரமைத்தல், பயிர்ச்செய்கை கிணறுகளை திருத்துதல், விவசாய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்குதல்..) வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

6. மாவட்ட வள விவரத்தை தயாரிப்பதன் மூலம் மாவட்டத்தின் மக்களுக்கு தகவல் வழங்கும் சந்தர்ப்பத்தை நிறைவேற்றுதல்.

7. மாவட்ட வள விவரத்தை தயாரிப்பதன் மூலம் மாவட்டத்தின் மக்களுக்கு தகவல் வழங்கும் சந்தர்ப்பத்தை நிறைவேற்றுதல்.





2.6.2 பல்வேறு துறைகள் மூலம் பெற்றுக்கொண்ட சாதனைகள்

1 பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

- மாவட்டத்தின் அனைத்து வீடுகள் மற்றும் வீட்டு அலகுகளை பட்டியலிட முடிந்தமை.
- 576 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஏற்புடைய மேட்டுநில பயிர்ச் செய்கை அறிக்கைகளை வெற்றிகரமாக சேகரித்தல்.
- 576 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஏற்புடைய 03 காலாண்டுகளின் கால்நடை புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- 12 உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளூராட்சி புள்ளிவிவரங்கள் சேகரித்தலை வெற்றிகரமாக மேற்கொள்ளல்.
- 2023 ஆம் ஆண்டில் மாவட்ட புள்ளிவிபரக் கையேட்டை தயார் செய்தல்.
- 12 பிரதேச செயலகங்களில் வெட்டி வீழ்த்தப்படும் மரங்கள் தொடர்பான புள்ளிவிவர அறிக்கைகளை சேகரித்தல்.
- 243 நெல் அறுவடை ஆய்வுகளை சிறு போகம் மற்றும் பெரும்போகத்தின் போது மேற்கொள்ளல்

2 உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு

- மாவட்டத்தில் மாதுளை செய்கையை பரப்புதல்
- தற்போது இத்துறையில் நிலவும் புளிவாழை பயிர்ச்செய்கையை ஏற்றுமதிக்காக அபிவிருத்தி செய்தல்.
